137

# வக்கீல்


பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

**மே 1953**

17 JUL 1953

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

**அணா 6**



...ரெஸாக்...

**THE VAKIL × TAMIL LAW MAGAZINE**

## "வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப்பத்திரிகை

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பித்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,
[ஆசிரியர்]

### "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5 விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். (பொருள் அட்டவணை தேவையில்லாதவர்கள் அணா 8 கழித்துக்கொண்டு பாக்கி ரூ. 4-8-0 அனுப்பினால் போதும்.) விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

**மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.**

### "வக்கீல்"
### (விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | | |
|---|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. | 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. | 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. | 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. | 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. | 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. | 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள
**பட்டு ஜவுளி இனுசுகள்**
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
—கிடைக்குமிடம்—

**ராணி
ரெங்கய்யர்
சன்ஸ்**

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கொருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

பெங்களூர்
காஞ்சிபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.

**ரெங்கமூர்த்தி
கம்பெனி**

கொருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி, நாட்டரசன்கோட்டை.

# V. S. & Sons

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்

## பெப்பர்மெண்டுகள்

*

— தயாரிப்பவர்கள் —

**தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலே,**
**கும்பகோணம்.**

(Estd. **1925**)

கல்யாண காலங்களுக்கு
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்

ருக்மணி ஸில்க்
எம்போரியம்

பெரிய தெரு, : : கும்பகோணம்

ஹெட் ஆபீஸ் :
PHONE 84188

மைலாப்பூர் ராதா ஸில்க்
எம்போரியம்
மதராஸ்.

"போக்கு வரத்து"
மாதமிருமுறை
ட்ரைவர், கண்டக்டர்களுக்கு,
மூதல் உதவிப் பாடங்கள் 22—3—53 தேதி
இதழில் ஆரம்பமாகின்றன.
தனிப் பிரதி 4-0-0. அரை வருஷ
சந்தா 3-8-0. வருஷ சந்தா 6-0-0.
இதர விஷயங்களுக்கு :-
தொழில் நிர்வாகி,
3, பட்டர்வொர்த் ரோட்,
தெப்பக்குளம் — திருச்சி.




# வக்கீல்

## பொருள் அடக்கம்

மலர் 5 — மே 1953 — இதழ் 5

ரஷ்யா "தமிழ்நாடு" ஹூப்ளி .. 3
புதிய சட்டங்கள் .. 5
சென்னைப் புகையிலை விற்பனை வரி—பதிவுச் சட்டம் (1953) .. 7
வழக்கும் - தீர்ப்பும்
* விற்பனை வரிச் சட்ட வழக்கு கமிஷன் ஏஜண்டும் ஒரு வியாபாரியே... 15
* பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கொஞ்சம் குடும்ப முதலைக் கொண்டு ஆரம்பித்துத் தனியே நடத்திய வியாபாரம் அவருடைய தனிச் சொத்தா—அல்லது எல்லோருக்கும் பொதுவான குடும்பச் சொத்தா? .. 16
* கலப்புத்தடை சட்டத்தின் கீழ், கடைச் சிப்பந்திகளையும் தண்டிக்கலாம். .. 17
* ஒரு தனி நபரிடமிருந்த நிலங்களை அவரிடமிருந்து எடுத்துக் கொள்ள பீஹார் சட்டசபை ஒரு சட்டம் செய்தது. இவ்வித சட்டம் செல்லாதென சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்புச் செய்தது. ஏன்? .. 18
* நமது நீதி பரிபாலன முறையிலும் தமக்குத்தாமே நீதி வழங்கிக்கொள்வது என்பது அனுமதிக்கப்படவில்லை. மோட்டார் பர்மிட் வழக்கு .. 19
* சோதனை செய்யவந்த ஷாப் இன்ஸ்பெக்டரை பலாத்காரமாக வெளியே தள்ளிய மளிகைக் கடைக்காரர் மீது கிரிமினல் வழக்கு. அவர் செய்தது தற்காப்பாகுமா? .. 20
சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் 22
கேள்வியும் — பதிலும் .. 27

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 5 | மே 1953 | இதழ் 5


## ரஷ்யா

ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் பெரிய யுத்தமொன்று உடனே நடந்துதான் தீருமென்று நினைத்துக் கொண்டிருந்த பெருச்சாளிகள் ஏமாந்துவிட்டனர். ஏனென்றால், ஸ்டாலினுக்குப் பின், ரஷ்ய பிரதமராக வந்திருக்கும் மாலங்கோவ் என்பவர் அநேகமாக உலக சமாதானத்தை நிலை நாட்டிவிட்டார் என்றே சொல்லவேண்டும்; அப்படிச் சொல்ல முடியாவிட்டாலும், யுத்த வதந்திகளுக்கு தாற்காலிகமாகவாவது அவர் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் என்பது திண்ணம். ரஷ்யாவில் ஆட்சி முறை மாறுகின்றது. மாலங்கோவிடம் சமாதான மனப்பான்மையும், விட்டுக் கொடுக்கும் தன்மையும் இருக்கின்றன. ரஷ்ய ஆட்சியில் இனி மூடுமந்திரங்கள் இருக்கமாட்டா. பலவெளிநாட்டினர் இப்போது தாராளமாக ரஷ்யா சென்று வருகின்றனர். ரஷ்யாவை உன்னத நிலைமைக்குக் கொண்டுவந்த இடைக்கால யதேச்சாதிகாரம், இனி தங்களுக்குத் தேவையில்லை என்பதை புதிய ரஷ்ய சர்க்கார் உணர்ந்துவிட்டனர் போலும்! ஆனால் இத்திடீர் மாறுதல்களிலும் ஏதோ ரகசியம் இருப்பதாகத்தான் சில அமெரிக்க யுத்தப் பிரியர்கள் கருதுகின்றனர்!

## "தமிழ்நாடு"

அக்டோபர் முதல் தேதியில் ஆந்திர ராஜ்யம் அமைக்கப்படுவதற்குள் தமிழ் மக்கள் வற்புறுத்தவேண்டிய இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. அவையாவன இப்போது சித்தூர் ஜில்லாவுடன் இணைக்கப்பட்டிருக்கும் தமிழ் தாலூக்காக்கள் தமிழ் நாட்டுடன்தான் இருக்கவேண்டும். இரண்டாவதாக ஆந்திர ஜில்லாக்கள் பிரிந்த பிறகு நமது ராஜ்யத்திற்கு "தமிழ் நாடு" என்ற பெயர் இருக்கவேண்டும். ஆந்திரப் பிரிவினைக்காக ஏற்படும் பார்லிமெண்ட் சட்டத்திலேயே, இவ்விஷயங்கள் கண்டிருக்கும்படி வற்புறுத்தவேண்டியது நமது சட்ட சபை பார்லிமெண்ட் மெம்பர்களின் கடமையாகும். தமிழ் நாட்டுடன் தென் கன்னடம் ஜில்லாவும், மலையாள ஜில்லாவும் தாற்காலிகமாகச் சேர்ந்திருந்தாலும் அவையும் இன்னும் இரண்டொரு வருடங்களுக்குள் நம்மை விட்டுப் பிரிந்து போவது நிச்சயம். ஆகையால் 'தமிழ் நாடு' என்ற பெயர் உடனடியாக வழங்கப்படுவதில் ஆட்சேபனைகள் ஒன்றுமில்லை.

187722

## ஹூப்ளி

பம்பாய் ராஜ்யத்திலுள்ள ஹூப்ளி பட்டணம் சென்ற மாதம் அமளிதுமளிப் பட்டது. ஆந்திர மாகாணத்தை உடனடியாக ஸ்தாபிக்கத் தம் உயிரைக் கொடுக்க ஒரு பொட்டி ஸ்ரீராமுலு இருந்தாரானல், கர்னடகத்தில் ஒரு தியாகி கூட இல்லையா? இருக்கிருர், என்று காண்பிக்க, ஹூப்ளி தாலூக்கா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ சங்கர்கௌடா பட்டீல் உண்ணுவிரதமிருந்தார். இப்போது நான்கு ராஜ்யங்களில் சிதரிக் கிடக்கும் கர்னடகர்களை ஒன்று சேர்த்து ஒரு கர்னடக ராஜ்யத்தை உடனடியாக ஸ்தாபிக்க வேண்டுமென்பதற்காகத் தான் சங்கர் கௌடா உண்ணுவிரத மிருந்தார். மத்திய சர்க்கார் இதற்கு இணங்கா விட்டால் கர்னடக காங்கிரஸ் கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். சென்ற மாதம் 19-ம் தேதி ஹூப்ளியில் கர்னடகப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி கூடியது. அவர்களும் அதே விஷயத்தை வற்புறுத்தி தீர்மானம் ஒன்று செய்யத் தான் உத்தேசித்திருந்தனர். ஆனல் கர்னடகப் பொதுமக்கள் இதற்கு இடங் கொடுக்க வில்லை. அன்று தினம் ஹூப்ளியில் சுமார் முப்பது நாற்பதாயிரம் மக்கள் பல கிராமங்களிலிருந்து வந்து பலத்த ஆர்ப்பாடம் செய்தனர். பிரதேச காங்கிரஸ் கமிட்டியானது கூட்டம் நடத்த முடியவில்லை. நிலைமையை சமாளிக்கப் பேலீசார் துபாக்கிப் பிரயோகம் செய்தனர்! பொட்டி ஸ்ரீராமுலு உயிர் நீத்த பிறகு ஆந்திர மக்கள் ரயில் வண்டிகளை உடைத்தனர். கர்னடக மக்கள் அது வரை நிலைமையைக் கைமிஞ்ச விடமாட்டார்கள். சங்கர கௌடா உண்ணு விரதத்தை உடனே நிறுத்துவதற்கான நிலைமையைத் தலைவர்கள் ஏற்படுத்த வேண்டுமென்பதே மக்களின் கோரிக்கை. சங்கர கௌடா உண்ணு விரதத்தை நிறுத்தி விட்டார். இனி மத்திய சர்க்கார் என்ன செய்வார்கள் என்று கவனிப்போம். குறைந்தது ஒருவராவது உயிரை விட்டால் தான் ஒரு புதிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமென்ற கொள்கையை நேரு வற்புறுத்தினல் கர்னடக ராஜ்யம் இப்போது வராது. காங்கிரசுக்குத்தான் பாஷாவாரி ராஜ்ய அமைப்பு விஷயமாக ஒரு திடமான கொள்கை இல்லையே?


கல்யாண
பட்டுநூல்
ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க்
எம்போரியம்

★

119, பெரிய தெரு, :: கும்பகோணம்.

விலை மலிவு உத்தரவாதம்



அயல் நாடு உள் நாடு சைகிள்களும், சைகிள் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிருேம். அன்பர்கள் ஒரு முறை விஜயம் செய்க.

உமா சைகிள் மார்ட்,
221, பெரியகடை வீதி,
கும்பகோணம்.

187722

# புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

## 1953-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

1. அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம். The Appropriation Act—1953 (5-3-1953) இந்திய அரசாங்கத்தின் செலவுகளுக்காக, 1952-53 நிதி வருடத்தில் இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் ரூ. 46,69,50,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

2. இந்தியத் தீர்வைப் பட்டியல் சட்டத் திருத்தம். The Indian Tariff Amendment Act 1953. (16-3-1953) 'பால்பேரிங்' முதலிய சில சாமான்களுக்கு பாதுகாப்பாக 31-12-1954 முடிய இறக்குமதி வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

3. யூனியன் சுங்க வரிகள் பங்கீடுச் சட்டம். The Union Duties of Excise—Distribution Act—1953. தீப்பெட்டி, புகையிலை, வனஸ்பதி இவற்றின்மீது 1944-ம் வருடத்திய மத்திய சுங்கவரி-உப்புச் சட்டத்தின்படி மத்திய சர்க்காரால் வசூல் செய்யப்படும் வரித்தொகைகளில் 60 சதவிகிதத்தை மத்திய சர்க்காரே வைத்துக்கொண்டு, பாக்கி 40 சத விகிதத் தொகைகளை இந்திய யூனியனில் அடங்கிய ராஜ்யங்களுக்குப் பங்கீடு செய்து கொடுப்பதற்கான சட்டம். 1-4-1952 முதல் ஒவ்வொரு நிதிவருடத்திலும் மேற்கண்டபடி பங்கீடு செய்யப்பட வேண்டிய தொகையில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு சதவிகிதம் மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட வேண்டுமென்று இச் சட்டத்தில் ஒரு ஜாபிதா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஒவ்வொரு வருடமும் பங்கீடு செய்யப்பட வேண்டிய தொகையில் சென்னை ராஜ்யத்திற்கு 16·44 சதவிகிதம் கொடுக்கப்படும். பம்பாய் ராஜ்யத்திற்கு 10·37 சத விகிதமும் மைசூர் ராஜ்யத்திற்கு 2·62 சத விகிதமும், திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திற்கு 2·68 சதவிகிதமும், உத்தர பிரதேசத்திற்கு 18·23 சத விகிதமும் கொடுக்கப்படும். இவ்விதம் மற்ற ராஜ்யங்களுடைய பங்கும் இச்சட்டத்தால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

4. அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம். Appropriation Vote on Account—Act 1953. (19 3-1953) 1-4-1953 முதல் ஆரம்பமாகும் 1953—54 நிதி வருடத்தில் அரசாங்கச் செலவுக்காக இந்தியப் பொது நிதியிலிருந்து ரூ. 2,47,30,17,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

5. ரயில்வேச் செலவு அனுமதிச் சட்டம். Appropriation—Railways — Act 1953. (19-3-1953) 1953-54 நிதி வருடத்தில் இந்தியப் பொது நிதியிலிருந்து இந்திய ரயில்வேக்களின் செலவுக்காக ரூ. 546,94,41,000 எடுத்துக் கொள்ளும்படி மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

6. ரயில்வேச் செலவு அனுமதி (2-வது) சட்டம். Appropriation Railways—No. 2 Act 1953. 1952-53 வருடத்தில் மறுபடியும் ரூ. 3,65,86,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

## 1953 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

1. சென்னை அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம். (Madras Appropriation Act 1953. (31-3-1953) 1-4-1952 முதல் ஆரம்பமான நிதி வருடத்திற்கு ராஜ்யப் பொது நிதியிலிருந்தும் இன்னும் ரூ. 20,86,28,500

செலவு செய்ய சென்னை சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

2. சென்னை அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம் (Madras Consolidated Fund withdrawal of Moneys Act 1953. (31—3—1953.) 1—4—1953 முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தின் ஒரு பாகத்தில் அரசாங்கச் செலவுக்காக ரூ. 86,75,85,000 எடுத்துக் கொள்ளும்படி சென்னை சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம். இந் நிதி வருடத்தில் ஆந்திர ராஜ்யப் பிரிவினை ஏற்படுவதால், நிதி வருடத்தின் ஒரு பாகத்திற்கே இச் சட்டத்தில் கண்ட செலவுகளைச் செய்ய இச் சட்டம் அனுமதிக்கின்றது.

3. சர்க்கார் உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளும் சொத்தச் சட்டத் திருத்தம். Madras Requisitioned Land Continance of Powers Ammendment Act 1953. (31-3-1953.) யுத்த காலத்தில் தனி நபர்களின் சொந்த சொத்துக்களைச் சர்க்கார் உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளுவதற்காக அதிகாரம் கொடுத்த இச்சட்டமானது ஒரு தாற்காலிகச் சட்டம் தான். அது 1-4-1953 உடன் அமுல் இழக்கும்படி இருந்தது. ஆனால் இத்திருத்தச் சட்டத்தால் அச்சட்டம் 1-4-1954 வரை அமுலில் இருக்கும்.

4. சென்னைப் புகையிலை விற்பனை வரிப் பதிவுச் சட்டம். Madras Tobacco--Taxation Sales and Registration--Act 1953. (20-4-1953) இச் சட்டம் இந்த இதழில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.


வெண்சங்கு நாமம் — ஜாதி சீயக்காய்த்தூள்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

மணி சீயக்காய்த்தூள் REGD. No 13817.

உரிமை
S. பெத்தண்ண நாடார்
..கீழவாசல்-தஞ்சாவூர்..


5. ஜில்லா போர்டுகள் சட்டத் திருத்தம் Madras District Boards--Ammendment Act 1953 (22-4-1953) இப்போது இருக்கும் ஜில்லா போர்டு மெம்பர்களின் பதவிகாலம் 1-7-1953 உடன் முடிவடைகிறது. ஆந்திரப் பிரிவினை காரணமாக, அதற்கு முன் ஜில்லா போர்டு தேர்தல்களை நடத்த வேண்டாமென சர்க்கார் தீர்மானித்து இச்சட்டம் கொண்டுவந்திருக்கின்றனர். இத்திருத்தச் சட்டம் 31-3-1954 வரை தான் அமுலில் இருக்கும் 1-7-1953 முதல் ஜில்லா போர்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு விசேஷ அதிகாரியை (Special officer) நியமிக்க இச்சட்டம் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கின்றது. இவ்விசேஷ அதிகாரிக்கு ஜில்லா போர்டின் அதிகாரமும் ஜில்லா போர்டுத் தலைவரின் அதிகாரமும் இருக்கும். விசேஷ அதிகாரியானவர் ஜில்லா கலெக்டராகவோ ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸராகவோ இல்லா விட்டால், அவருக்குச் சம்பளம் கொடுக்கச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. பிறகு சர்க்காருக்கு யுக்தமாகத் தோன்றும் தேதிகளில், அந்தந்த ஜில்லா போர்டுக்குத் தேர்தலை நடத்த சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய ஜில்லா போர்டு மெம்பர்கள் பதவி ஏற்கும் தேதி வரை இந்த விசேஷ அதிகாரிகள் தான் அதிகாரம் செலுத்துவார்கள். ஆந்திராவிலுள்ள ஸ்ரீகாகுளம் விசாகபட்டணம் இந்த இரண்டு ஜில்லா போர்டு மெம்பர்களின் பதவிகாலம் மட்டில் 29-12-1953-ல் தான் முடிவடைவதால், அந்த இரண்டு ஜில்லா போர்டுகளுக்கு மட்டில் 29-12-1953 தேதி முதல் தான் விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லா போர்டுகளுக்கும் இச் சட்டப்படி 1-7-1953 முதல் விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.


ஆடைகளை அழகு பெறச் செய்வது
~ அன்னகிளி ~
சோப்
—தயாரிப்பவர்—
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38 :: தஞ்சாவூர்

# சென்னைப் புகையிலை விற்பனைவரி-பதிவுச் சட்டம் (1953)

[Madras Tobacco (Taxation of Sales and Registration) Act 1953. **1953-ம் வருடத்திய 4-வது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் இயற்றப்பட்டு 9-4-1953ல் சென்னை கவர்னர் அவாகளால் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற்காக அனுப்பப் பட்டு 18-4-1953ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 20-4-1953 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் 4 B விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி 20-4-1953**]

*20-6-1953க்குள் புகையிலையில் தொழில் செய்பவர்கள் யாவரும் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ளவேண்டும். அதற்குப் பிறகு ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட் இல்லாமல் புகையிலையில் தொழில் செய்வது குற்றமாகும்.*

**[வரி விதிக்கப்பட்ட சிகார், சுருட்டு, சிகரெட், சிகரெட்புகையிலை, பைப் புகையிலை இவைகளில் எவ்விதத் தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்களும் சரி, வரி விதிக்கப் படாத பீடி, தாம்பூலப் புகையிலை, மூக்குப் பொடி போன்ற புகையிலை சம்பந்தப்பட்ட எவ்வித சரக்குகளில் சில்லறை வியாபாரம் உள்பட எவ்விதத் தொழில் செய்பவர்களும் சரி— இச்சட்டப்படி ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்பதை நன்முக கவனிக்கவும். புகையிலைப் பயிர் செய்பவர்கள் மட்டில் ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டியதில்லை.]**

### பீடிகை

சென்னை ராஜ்யத்தில் புகையிலை விற்பனைமீது ஒரு வரி விதிப்பதும், புகையிலை சம்பந்தமான தொழில் செய்பவர்களைப் பதிவு செய்து கொள்ளுவதும் யுக்தமாகத் தோன்றுவதால் அடியில்கண்டபடி சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது:—

### சட்டத்தின் பெயரும் அமுலில் உள்ள இடங்களும்

செக்ஷன் 1 (1) இச்சட்டத்திற்கு 1953ஆம் வருடத்திய சென்னைப் புகையிலை விற்பனை வரிப் பதிவுச் சட்டம் என்றுபெயர்.

(2) இச்சட்டம் சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும்.

### சொற்களின் பொருள்

செக்ஷன் 2 இச்சட்டத்தில் விஷயத்தைப் பொறுத்தாவது, சந்தர்ப்பத்தைப் பொறுத்தாவது வேறு விதமாக அர்த்தம் செய்து கொள்ளும்படி இருந்தாலொழிய அடியில் கண்ட சொற்களின் பொருள் பின் வருமாறு:—

(1) 'தரகர்' (Broker) என்ருல், வேறு ஒருவருக்காகப் புகையிலையை விற்பனை செய்யவோ, புகையிலையை வாங்கவோ தொழில் முறைமையில் பேரம் செய்து ஒப்பந்தம்செய்து கொள்பவர்களைக் குறிக்கும்; ஆனால் விற்பனைக்காக இவர்கள் புகையிலையைத் தம் கை வசம் வைத்துக் கொள்ளுபவர்களாகவோ, வாங்கும் புகையிலையைத் தாங்களே தம் கைவசம் எடுத்துக் கொள்ளுபவர்களாகவோ இருக்கக் கூடாது.

(2) 'சர்டிபிகேட் வைத்திருப்பவர்' (Certificate Holder) என்ருல் இச்சட்டப்படி பதிவு அல்லது ரிஜிஸ்டர் செய்து கொண்டதற்காக அத்தாட்சி (சர்டிபிகேட்) கொடுக்கப்பட்டவரைக் குறிக்கும்.

(3) 'கமிஷன் ஏஜண்டு' — என்ருல் வேறு ஒருவருக்காகப் புகையிலையை விற்பனை செய்யவோ, வாங்கவோ, தம் தொழில் முறைமையில், பேரம் செய்து ஒப்பந்தம் செய்பவர்களைக் குறிக்கும்; இவர்கள் விற்பனை செய்யும் புகையிலையை வாங்குபவரிடம் கொடுப்பதற்காகப் புகையிலையைத் தம் வசம் வைத்திருப்பவர்களாகவும்; இவர்கள் வாங்கும் புகை

யிலையைத் தாமே தம் வசம் எடுத்துக்கொள்ளுபவர்களாகவும் இருக்கவேண்டும்.

(4) 'கமிஷனர்' என்ருல் இச்சட்டப்படி கமிஷனர் செலுத்தவேண்டிய அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளைச் செய்யவும் ராஜ்ய சர்க்காரால் நியமிக்கப்படும் ரிவின்யூ போர்டு மெம்பர் ஒருவரையோ அல்லது வேறு அதிகாரியையோ குறிக்கும்.

(5) 'டிப்டி கமிஷனர்' — என்ருல் அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள வியாபார வரி டிப்டி கமிஷனரைக் குறிக்கும்; இச்சட்டப்படி டிப்டி கமிஷனர் செலுத்த வேண்டிய அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளைச் செய்யவும் ராஜ்ய சர்க்காரால் நியமிக்கப்படும் அதிகாரிகளும் இதில் சேர்ந்தவர்களே.

(6) 'வியாபாரி' (Dealer) என்ருல்—புகையிலையை வாங்கி விற்கும் தொழில் நடத்துபவரைக் குறிக்கும்.

(7) 'பயிர் செய்பவர்' (Grower)—என்ருல், சென்னை ராஜ்யத்தில் புகையிலைப் பயிர் செய்பவரைக் குறிக்கும்; ஆனல் 1913ஆம் வருடத்திய கம்பெனிச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட கூட்டு வியாபாரங்களோ சங்கங்களோ இதில் சேர்ந்தவையல்ல.

(8) 'மாஜிஸ்ட்ரேட்'—என்ருல் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டையும், முதல் அல்லது இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டையும் குறிக்கும்.

(9) 'தயார் செய்யப்பட்ட புகையிலை' (Manufactured Tobacco) என்ருல்—சிகார், சுருட்டு, சிகரெட்டு, சிகரெட்டுப் புகையிலை, பைப்புகையிலை, பீடி, மூக்குப் பொடி இவற்றைக் குறிக்கும்; ஆனல் மறுபடியும் தயாரிப்பு செய்வதற்கான உத்தேசத்துடன் செய்யப்படும் புகையிலைச் சரக்குகளும் புகையிலைக் கலப்புகளும் இதில் சேரமாட்டா.

(10) 'விதிகளால் நிர்ணயிக்கப்படும்'—என்ருல் இச்சட்டத்தை அனுசரித்து ஏற்படும் விதிகளால் நிர்ணயிக்கப்படும்—என்று அர்த்தம்.

(11) 'சில்லறை வியாபாரி' (Retail Dealer)—யார் ஒருவர் புகையிலை வாங்குகிருரோ, அல்லது யார் ஒருவருக்காகப் புகையிலை வாங்கப்படுகிறதோ, அவருடைய சொந்த உபயோகத்திற்காகப் புகையிலையை விற்பனை செய்பவருக்குச் 'சில்லறை வியாபாரி'—என்று பெயர்.

(12) 'விற்பனை'—என்பது இனமாக அல்லாமல் வேறு எந்த வழியில் பாத்தியங்கள் மாற்றப்படுவதையும் குறிக்கும்.

விவரணம்:—கூட்டுறவுச் சங்கங்களாலும், கிளப்புகளாலும், கூட்டு வியாபாரங்களாலும், வேறு வகைச் சங்கங்களாலும் தங்களுடைய அங்கத்தினர்களுக்குச் செய்யப்படும் விற்பனைகளும் இதில் சேர்ந்தவையே.

(13) 'வரி விதிக்கப்பட்ட புகையிலை' (Taxed Tobacco)—என்பது இச்சட்டத்தால் வரி விதிக்கப்படும் தயார் செய்யப்பட்ட புகையிலையை — அதாவது சிகார், சுருட்டு, சிகரெட், சிகரெட்டுப் புகையிலை, பைப்புகையிலை இவற்றைக் குறிக்கும்.

(14) 'புகையிலை' (Todacco) என்பதில் தயார் செய்யப்பட்ட புகையிலை, பாடம் செய்யப்பட்ட புகையிலை, பாடம் செய்யப்படாத புகையிலை, புகையிலை அல்லது புகையிலைப் பயிரின் இலையால் செய்யப்பட்ட அல்லது இவை கலக்கப்பட்ட சரக்குகள் — ஆகிய எந்த நிலைமையில் இருக்கும் புகையிலையும் அடங்கும்.

(15) 'புகையிலையில் தொழில் செய்பவர்' (A person doing business in Tobacco) என்ருல், மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி, மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் சேர்ந்து செய்யும் வியாபாரி, கமிஷன் ஏஜண்டு, தரகர் இவர்களைக் குறிக்கும். ஆனல் புகையிலைப் பயிர் செய்பவரை இது குறிக்காது.

(16) 'புகையிலை அதிகாரி' (Tobacco officer)—என்ருல் செக்ஷன் 10-இன்படி நியமிக்கப்படும் அதிகாரியைக் குறிக்கும்.

(17) 'வியாபாரத் தொகை' (Turnover) என்ருல்—ரொக்கத்திற்கோ கடன் கட்டாகவோ அல்லது வேறு சரியான பிரதிப் பிரயோஜனத்திற்காகவோ வரி விதிக்கப்பட்ட புகையிலை விற்பனைகளின் மொத்தத் தொகைகளைக் குறிக்கும்.

(18) 'மொத்த வியாபாரி' (whole sale Dealer) — என்றால் — வியாபாரத்திற்காகவோ, தயாரிப்பதற்காகவோ புகையிலை வாங்குபவரையும் விற்பனை செய்பவரையும் குறிக்கும்.

(19) 'வருடம்'—என்றால், நிதி வருடம் என்று அர்த்தம்.

### வியாபாரிகளைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்வது

(1) ஒவ்வொரு புகையிலை அதிகாரியும், தம்முடைய எல்லைக்குள் புகையிலையில் தொழில் செய்யும் எல்லா நபர்களைப்பற்றியும் விதிகளால் நிர்ணயம் செய்யப்படும் முறையில் ஒரு ரிஜிஸ்டர் வைத்துக் கொள்ளவேண்டும்.

செக்ஷன் 3

(2) புகையிலையில் தொழில் செய்யும் எவரும் (அது வரி விதிக்கப்பட்ட புகையிலையாக இருந்தாலும் சரி, வரி விதிக்கப்படாத புகையிலையாக இருந்தாலும் சரி) தம்மைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்துகொள்ளும்படி கேட்டு, தாம் தொழில் நடத்தும் பிரதான இடத்திற்கு அதிகாரமுள்ள புகையிலை அதிகாரிக்கு, விதிகளில் கண்ட நமூனாப்படி, மனுப்போட வேண்டும்.

(3) அவ்வித மனுப்போட்டு, கீழே 4ஆவது ஷரத்தில், கண்ட கட்டணமும் கட்டப்பட்டவுடன் மனுதாருக்குப் புகையிலை அதிகாரியானவர் நமூனாப்படி ஒரு சர்டிபிகேட் கொடுக்கவேண்டும்.

(4) சில்லறை வியாபாரிக்குக் கட்டணம் ரூ. 1; மொத்த வியாபாரி, மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் சேர்ந்து நடத்தும் வியாபாரி, தரகர், கமிஷன் ஏஜண்டு இவர்களுக்குக் கட்டணம் ரூ. 10.

(5) ஒருவருக்கு, ஒரே டவுனிலோ, ரிவின்யூ வட்டத்திலோ, அல்லது வெவ்வேறு டவுன்களிலோ ரிவின்யூ வட்டங்களிலோ, ஒன்றுக்கு அதிகமான கடைகளோ, தொழில் நடத்தும் இடங்களோ இருந்தால், அவர் தம்முடைய ஒவ்வொரு கடைக்கும், ஒவ்வொரு தொழில் நடத்தும் இடத்திற்கும் தனித்தனியாகப் பதிவு செய்து கொள்ள மனுப்போட்டு ஒவ்வொன்றுக்கும் தனித்தனி 'ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட்' வாங்கிக் கொள்ள வேண்டும்.

(6) இச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகோ, அல்லது விதிகளால் நிர்ணயிக்கப்படும் தேதிக்குப் பிறகோ, மேலே கண்ட 'ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட்' இல்லாமல் எவரும் புகையிலையில் தொழில் செய்யக் கூடாது.

(7) ஒரு சர்டிபிகேட் ஒரு வருடத்திற்குத்தான் அமுலில் இருக்கும். மேலே 4ஆவது ஷரத்தில் கண்ட கட்டணத்தைக் கட்டி ஒவ்வொரு வருடமும் அதைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

(8) வரி விதிக்கப்பட்ட புகையிலையில் தொழில் செய்யாமலோ, அல்லது கடையோ அல்லது ஸ்திரமாகத் தொழில் செய்யும் இடமோ வைத்துக் கொள்ளாமலோ, கிராமப் பிரதேசங்களில் புகையிலையில் தொழில் நடத்தும் எந்த வகை நபர்களுக்கும் மேலே 1 முதல் 7 வரை உள்ள உட்பிரிவு ஷரத்துக்கள் கிடையாதென்று விதிகள் மூலம் விதிவிலக்கு அளிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

### விற்பனைத் தொகை மீது வரி

(1) வரி விதிக்கப்பட்ட புகையிலையைப் பொறுத்து, சென்னை ராஜ்யத்தில் நடக்கும் முதல் விற்பனை மீது கீழே 3ஆவது உட்பிரிவில் கண்ட விகிதப்படி ஒரு வரி விதிக்கப்படும். ஆனால், இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளிலிருந்தோ, அல்லது இந்திய யூனியனைச் சேர்ந்த வேறு ராஜ்யங்களிலிருந்தோ, வரி விதிக்கப்பட்ட புகையிலையானது சென்னை ராஜ்யத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்டால், அவ்வித வரிவிதிக்கப்பட்ட புகையிலையானது சென்னை ராஜ்யத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட பிறகு, சென்னை ராஜ்யத்திற்குள் ஏற்படும் முதல் விற்பனையின்மீது தான் இவ்வரி விதிக்கப்படும்.

செக்ஷன் 4

(2) மேலே 1ஆவது உட்பிரிவின்படி கொடுக்கப்பட வேண்டிய வரியை, விற்பனை செய்பவர்தான் கொடுக்க வேண்டும். ஆனால் ஏஜண்டு மூலமாகவோ

கமிஷன் ஏஜண்டு மூலமாகவோ, ஏற்படும் விற்பனைகளுக்கு விற்பனை செய்பவரிட மிருந்தோ, ஏஜண்டிடமிருந்தோ, கமிஷன ஏஜண்டிடமிருந்தோ இவ்வரியை வசூல் செய்யலாம்.

## சிகரெட்

(a) (1) சிகரெட் உபயோகிப்பவருக்குச் சில்லறை வியாபாரத்தில் ஒவ்வொன்றும் 3 தம்படிக்கு அதிகப்படாத விலையில் விற்கப் பட வேண்டிய சிகரெட்டுக்களை, வரி கொடுக்க வேண்டியவர், சிகரெட் ஒன்றுக்கு 3 தம்படிக்குக் குறைவான விலையில் விற்ருல்—அவ்விற்பனைத் தொகைக்கு வரி கிடையாது.

(2) மேலே 1 ஆவது உட்பிரிவின்படி உள்ள சிகரெட்டுகள் போகப் பாக்கிச் சிகரெட்டுகளின் விற்பனை மீது கீழே கண்டபடி வரி விதிக்கப்படும். அதாவது (i) சிகரெட் உபயோகிப்பவருக்குச் சில்லறை வியாபாரத்தில் ஒவ்வொன்றும் 6 தம்படிக்கு அதிகப்படாத விலையில் விற்கப்படவேண்டிய சிகரெட்டுக்களை வரி கொடுக்வேண்டிய வர் சிகரெட் ஒன்றுக்கு 6 தம்படிக்குக் குறைவான விலையில் விற்ருல்—அவ்விற்பனைத் தொகையில் 10 சதவிகிதம் வரி விதிக்கப்படும்.

(ii) சிகரெட் உபயோகிப்பவருக்குச் சில்லறை வியாபாரத்தில் ஒவ்வென்றும் 9 தம்படிக்கு அதிகப்படாத விலையில் விற்கப் பட வேண்டிய சிகரெட்டுக்களை வரி கொடுக்க வேண்டியவர் சிகரெட் ஒன்றுக்கு 9 தம்படிக்குக் குறைவான விலையில் விற்ருல்—அவ்விற்பனைத் தொகையில் 20 சத விகிதம் வரி விதிக்கப்படும்.

(iii) மேலே (i) அல்லது (ii) பிரிவு களின் படி வரி விதிக்கப்படாத சிகரெட்டு களை விற்ருல்—விற்பனைத் தொகையில் 30 சத விகிதம் வரி விதிக்கப்படும்.

## சிகார்—சுருட்டு

(b) சிகார், சுருட்டு இவைகளின் விற்பனைத் தொகையில் 30 சத விகிதம் மேலே 1-ஆவது உட்பிரிவில் கண்டபடி வரி விதிக்கப்படும். ஆனல் சிகார் அல்லது சுருட்டு உபயோகிப்பவருக்குச் சில்லறை வியாபாரத்தில், ஒவ்வொன்றும் 2 அணு வுக்கு அதிகப்படாத விலையில் விற்கப்பட வேண்டிய சிகார் அல்லது சுருட்டுக்களை வரி கொடுக்க வேண்டியவர், சிகார் அல்லது சுருட்டு ஒன்றுக்கு 2 அணுவுக்குக் குறை வாக விற்ருல்—அவ்விற்பனைக்கு வரி கிடையாது.

## பைப்புகையிலை அல்லது சிகரெட் புகையிலை

(c) பைப் புகையிலை விற்பனைக்கும் சிகரெட் புகையிலை விற்பனைக்கும்—விற்பனைத் தொகையில் 30 சத விகிதம் மேலே 1-ஆவது உட் பிரிவில் கண்டபடி வரி விதிக்கப்படும்.

## பதிவை (ரிஜிஸ்ட்ரேஷனை) ரத்துச் செய்ய அதிகாரம்

வரி விதிக்கப்படும் புகையிலையில் தொழில் செய்யும் நபருக்கு இச்சட்டப்படி கொடுக்கப்பட்ட 'ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட்டைக்'
செக்ஷன் 5
கீழே கண்ட காரணங்களினுல் ரத்துச் செய்யவும், சிறிது காலம் அமுலில் இல்லாமல் நிறுத்தி வைக்கவும், (அதாவது சஸ்பெண்டு செய்யுவும்) டிப்டி கமிஷன ருக்கு அதிகாரமுண்டு. அதாவது (a) வரி கொடுக்க வேண்டியவா தாம் கொடுக்க வேண்டிய வரியையோ, வேறு தொகைகளையோ சரி வரக் கொடுக்கா விட்டாலும், (b) அல்லது அவர்கள் விதி களில் கண்டபடி உண்மையானதும் சரியா னதுமான கணக்குகளை வைத்துக் கொள்ளத் தவறினுலும், அல்லது விதி களின்படி உண்மையானதும் சரியானது மான கணக்குகளை அதிகாரிகளுக்கு 'ரிடர்ன்' அனுப்பத் தவறினுலும் (c) அவ்விதமான சர்டிபிகேட் வைத்திருப்பவர் இச்சட்டப் படிக்கோ விதிகளின்படிக்கோ குற்றம் செய்து அபராதம் விதிக்கப் பட்டிருந்தா லும்—மேலே கண்டபடி சர்டிபிகேட் ரத்துச் செய்யப்படலாம் அல்லது 'சஸ்பெண்ட்' செய்யப்படலாம்.

## வரிவசூலிப்பது

இச் சட்டப்படி ராஜ்ய சர்க்காருக்குக் கொடுக்கப்பட வேண்டிய எல்லா வரிகளையும் மற்றத் தொகைகளையும் நிலவரியை வசூல் செய்வது போல் வசூல் செய்யலாம்.
செக்ஷன் 6

187722

## சில வியாபாரிகள், வாங்குபவர்கள் இவர்களுடைய கடமைகள்

செக்ஷன் 7

(1) வரி விதிக்கப்பட்ட புகையிலையில் மொத்த வியாபாரியாகவோ, இறக்குமதி செய்பவராகவோ, தயாரிப்பவராகவோ, கமிஷன் ஏஜண்டாகவோ, தொழில் செய்பவர்களும், மேற்கண்டவர்களிடமிருந்து வரி விதிக்கப்பட்ட புகையிலையை வாங்கும் ஒவ்வொரு வியாபாரியும் விதிகளில் கண்டபடி உண்மையாகவும் சரியாகவும் கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டும்; விதிகளில் கண்டபடி அவர்கள் கணக்குகள் (ரிட்டர்ன்) அனுப்ப வேண்டும்.

(2) மேலே 1-ஆவது உட்பிரிவில் கண்ட கணக்குகளும் ரிட்டர்ன்களும் தொழில் நடக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் தனித் தனியாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(3) மேலே 1-ஆவது உட்பிரிவில் கண்டவர்களுடைய கணக்குகளையும், அவர்களுடைய தொழில் சம்பந்தமான வேறு தஸ்தாவேஜுகளையும் தாகல் செய்யும்படி டிப்டி கமிஷனரோ, அல்லது விதிகளால் குறிப்பிடப்படும் வேறு அதிகாரியோ உத்தரவு செய்தால், அவ்விதம் தாகல் செய்ய வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

(4) டிப்டி கமிஷனரோ அல்லது விதிகளால் குறிப்பிடப்படும் வேறு உத்தியோகஸ்தரோ கேட்டால், மேற்கண்டவர்கள் புகையிலை சம்பந்தமான தங்களுடைய எல்லா நடவடிக்கைகளைப் பற்றியும் பூராவாக உண்மை விவரங்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றனர். அவர்களுடைய தொழில் சம்பந்தமான வேறு விஷயங்களைப்பற்றிக் கேட்டாலும் அவற்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

(5) மேலே 1-ஆவது உட்பிரிவில் கண்டவர்கள் தொழில் நடத்தும் இடங்களிலும் அவர்கள் கணக்குகள் வைத்துக் கொண்டிருக்கும் இடங்களிலும் அவர்கள் புகையிலைச் சரக்கு (ஸ்டாக்) வைத்துக் கொண்டிருக்கும் இடங்களிலும் நுழையவும் அங்கே சோதனைகள் செய்யவும் டிப்டி கமிஷனரால் இதற்காகவே அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கும் எந்த உத்தியோகஸ்தருக்கும் உரிமை உண்டு. ஆ[illegible]ஸ்தலமாக உபயோகிக்கப் பட்டு வரும் இடங்களில் நுழையவும், அங்கே சோதனை செய்யவும் டிப்டி கமிஷனர் அல்லது கெஜட் பதவு அந்தஸ்துள்ள புகையிலை அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதி வேண்டும்; அவ்வதிகாரிகளும் அவ்வித அனுமதி கொடுப்பதற்கு முன் அதற்கான காரணங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## கமிஷனரின் கடமைகள்

செக்ஷன் 8

ராஜ்ய சர்க்காரின் அதிகாரத்திற்கும் உத்தரவுகளுக்கும் உட்பட்டு இச்சட்டம் சென்னை ராஜ்யத்தில் அமுல் நடப்பதையும், இச்சட்டப் படிக்கான வரிகளும், கட்டணங்களும், வேறு தொகைகளும் வசூல் செய்யப்படுவதையும் மேற்பார்வை பார்ப்பது கமிஷனருடைய கடமையாகும்.

## டிப்டி கமிஷனருடைய கடமைகள்

செக்ஷன் 9

ராஜ்ய சர்க்கார், கமிஷனர் இவர்களுடைய அதிகாரத்திற்கும் உத்தரவுகளுக்கும் உட்பட்டு அவரவர்களுடைய அதிகார எல்லைக்குள் இச்சட்டப்படிக்கான வரிகளையும், கட்டணங்களையும் மற்றத் தொகைகளையும் வசூல் செய்யும் பொறுப்பும் இச்சட்ட ஷரத்துக்களை அமுல் நடத்தும் பொறுப்பும் டிப்டி கமிஷனர்களுடைய பொறுப்பாகும்.

## புகையிலை அதிகாரிகள்

செக்ஷன் 10

ராஜ்ய சர்க்காருடையவும், அவர்களுடைய பொதுவான அல்லது குறிப்பான உத்தரவுகளுக்கு உட்பட்டு கமிஷனரும், புகையிலை அதிகாரிகளை நியமிக்கலாம். குறிப்பிட்ட நபர்களோ, அல்லது குறிப்பிட்ட உத்தியோகம் வகிக்கும் உத்தியோகஸ்தர்களோ புகையிலை அதிகாரிகளாக நியமிக்கப்படலாம். சர்க்காருக்கோ அல்லது கமிஷனருக்கோ யுக்தமாகத் தோன்றும் அதிகாரங்களைப் புகையிலை அதிகாரிகள் செலுத்தும்படிக்கும் கடமைகளைச் செய்யும்படிக்கும் உத்தரவிடலாம்.

## ஸ்தலத்திற்குள் நுழையவும் சோதனை செய்யவும் அதிகாரம்

செக்ஷன் 11

(a) இச்சட்ட ஷரத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக ஒரு இடமோ, வாகனமோ உபயோகிக்கப்பட்டு வருகிறதென்று நினைக்கக் காரணங்கள் இருந்தால், அந்த இடத்தில் நுழையவும், சோதனை போடவும், (b) அங்கே கண்டு பிடிக்கப்படுகிற வரி விதிக்கப்பட்ட புகையிலை ஸ்டாக்கையும், கணக்குகளையும் கைப்பற்றவும் டிப்டி கமிஷனருக்கும், இதற்காக விசேஷ அதிகாரம் அளிக்கப்பட்ட புகையிலை அதிகாரிகளுக்கும் அதிகாரமுண்டு. ஆனால், கணக்குகளோ சரக்குகளோ கைப்பற்றப்பட்டால், அவை 24 மணி நேரத்திற்குள் மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜர் செய்யப்படவேண்டும்; அத்துடன் கைப்பற்றியது சம்பந்தமான சந்தர்ப்பங்களைப்பற்றிய விவரங்கள் அடங்கிய ஒரு யாதாஸ்தும் அனுப்பப்படவேண்டும். ஆனால் வாசஸ்தலமாக உபயோகிக்கப்பட்டு வரும் இடங்களில் நுழையவும், அங்கே சோதனை செய்யவும், டிப்டி கமிஷனர் அல்லது கெஜட் பதிவு அந்தஸ்துள்ள புகையிலை அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதி வேண்டும்; அவ்வதிகாரிகளும் அவ்வித அனுமதி கொடுப்பதற்குமுன் அதற்கான காரணங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

## தண்டனைகள்

செக்ஷன் 12

(a) இச்சட்டத்திற்கோ இச்சட்ட விதிகளுக்கோ முரணாக ஒருவர் புகையிலையில் தொழில் நடத்தினாலும் (b) செக்ஷன் 7 (1) இன்படி வைத்துக் கொள்ளப்பட வேண்டிய கணக்குப் புத்தகங்களை ஒருவர் வேண்டுமென்று வைத்துக் கொள்ளத் தவறினாலும் (c) செக்ஷன் 7 (1) இன்படி அனுப்பவேண்டிய 'ரிடர்ன்களை' ஒருவர் அனுப்பத் தவறினாலும் அல்லது பொய்யான அல்லது அரைகுறையான ரிடர்ன்களை ஒருவர் அனுப்பினாலும், (d) அனுமதிக்கப்பட்ட கெடுவுக்குள் ராஜ்ய சர்க்காருக்கு ஒருவர் கொடுக்கவேண்டிய வரிகளையோ கட்டணங்களையோ, வேறு தொகைகளையோ கட்டாவிட்டாலும், (e) இச்சட்ட ஷரத்துக்களையோ விதிகளையோ ஒருவர் மீறினாலும்—குற்றமாகும். அக்குற்றத்திற்கு ரூ. 1000 வரை அபராதம் விதிக்க மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமுண்டு. இவ்விதமான தண்டனை விதிக்கப்பட்டதால், குற்றம் செய்தவர் கொடுக்க வேண்டிய வரியையோ வேறு தொகைகளையோ கொடுக்கவேண்டிய கடமை போய்விடாது.

செக்ஷன் 13

இச்சட்டம் மீறப்பட்டதாக டிப்டி கமிஷனரோ, புகையிலை அதிகாரியோ பிராது அல்லது யாதாஸ்து கொடுத்தால் ஒழிய, எந்த மாஜிஸ்ட்ரேட்டும் அக்குற்றங்களைப் பற்றிய வழக்கை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

## அதிகாரிகளின்மீது சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள சர்க்காரின் அனுமதி வேண்டும்

செக்ஷன் 14

(1) ராஜ்ய சர்க்காரின் ஒரு உத்தியோகஸ்தரோ அல்லது ஊழியரோ இச்சட்டப்படி அவர் செய்ய வேண்டிய கடமைகளையோ வேலைகளையோ நல்லெண்ணத்துடன் செய்யும்போது அவர் செய்யும் எந்தச் செய்கையைப் பொறுத்தும் அவர்மீது எவரும் எந்தச் சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது.

(2) இச்சட்டப்படிக்கோ அல்லது இச்சட்டப்படிக்கு என்று நினைத்துக் கொண்டோ ஒரு ராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தரோ அல்லது ஊழியரோ செய்யும் காரியத்தைப் பொறுத்து, அவர்மீது சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமானால், அப்படிச் செய்ய ராஜ்ய சர்க்காரின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### காலாவதி

இச்சட்டப்படிக்கோ அல்லது இச்சட்டப்படி என்று நினைத்துக்கொண்டோ செய்யப்பட்ட காரியத்தைப் பொறுத்து ராஜ்ய சர்க்கார் மீது தாவா போடவேண்டு மானாலும் சரி, அல்லது, ராஜ்ய சர்க்காரின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர்மீது சிவில் தாவாவோ, கிரிமினல் நடவடிக்கையோ அல்லது வேறு நடவடிக்கைகளோ எடுத்துக்கொள்ள வேண்டுமானாலும் சரி, அக்காரியம் அல்லது செய்கை ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் அவை தொடரப்படவேண்டும். மேலே செக்ஷன் 14 (2) ல் கண்ட சர்க்கார் அனுமதியை வாங்கத் தேவையான காலத்தை நீக்கி மேற்கண்ட 6 மாத காலம் என்பது கணக்குச் செய்யப்படவேண்டும்.

செக்ஷன் 15

### விதிகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரம்

(1) இச்சட்டத்தின் நோக்கங்களை அமுல் நடத்தத் தேவையான விதிகளைச் செய்ய ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. (2) மேலே கண்ட பொதுவான அதிகாரத்திற்குக் குந்தகமில்லாமல் கீழே கண்ட விஷயங்களைப்பற்றி அவ்விதிகள் இருக்கலாம். அவையாவன:—(a) இச்சட்ட ஷரத்துக்களின்படி விதிகள் செய்ய வேண்டியிருந்தாலும் (b) இச்சட்ட ஷரத்துக்களை அமுல் நடத்துவதற்காகப் புகையிலையின் விற்பனை கையிருப்பு, போக்கு வரத்து இவற்றை ஒழுங்கு படுத்தவும் (c) இச் சட்ட அதிகாரிகள் (மாஜிஸ்ட்ரேட் அல்லது கோர்ட் தவிர) செய்யும் எந்த எந்த உத்தரவுகளின் பேரில் எந்த எந்த அதிகாரிகளுக்கு அப்பீல் அல்லது பரிசீலனை மனுக்கொடுக்கலாம், அதற்குக் காலாவதி, முறை இவை பற்றியும் (d) புகையிலை அதிகாரிகளின் அதிகாரங்கள், கடமைகள், அவர்கள் பின்பற்ற வேண்டிய நடை முறை பற்றியும் (e) இச்சட்ட அதிகாரங்களை எந்த அதிகாரிகளுக்கு மாற்றலாம் என்பது பற்றியும் (f) தொழில் நின்று விட்டாலும் மாற்றப்பட்டாலும் எப்படி வரி விதிப்பது என்பதைப் பற்றியும் (g) மைனர்கள், சக்தியற்றவர்கள் இந்த ராஜ்யத்திற்கு வெளியே வசிப்பவர்கள் இவர்கள்மீது வரி விதிப்பது பற்றியும் (h) கோர்ட் ஆப் வார்ட்ஸ், அட்மிஸ்னிட்ரேடர் ஜெனரல், அபிஷியல் டிரஸ்டி, அல்லது கோர்ட்டாலோ, கோர்ட் உத்தரவுப்படியோ நியமிக்கப்பட்டிருக்கும் ரிசீவர் அல்லது மானேஜர் இவர்களுடைய நிர்வாகத்திலிருக்கும் தொழில்களுக்கு வரி விதிப்பது பற்றியும் (i) வரி விதிக்கத் தவறிப்போன வியாபாரத்தைப் பற்றியும் 3 வருடங்களுக்குள் எவ்வளவு கெடுவுக்குள் அதற்கு வரி விதிக்கலாம் என்பது பற்றியும் (j) வரி விதிப்பு, அப்பீல், ரிவிஷன் இந்நடவடிக்கைகளில் வெளிப்படையாகத் தோன்றும் தவறுகளைத் திருத்துவது பற்றியும், எந்த கெடுவுக்குள் அவைகளைத் திருத்தலாமென்பது பற்றியும், (k) இறந்தவர் கொடுக்கவேண்டிய வரியை அவருடைய வார்சுகளிடம் வசூல் செய்வது பற்றியும் (l) இச்சட்ட ஷரத்துக்களையோ, விதிகளையோ அமுல் நடத்துவதில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை நிவர்த்தி செய்யவும் இச்சட்டத்தின் நோக்கங்கள் சுலபமாக நிறைவேறவும் விதிகள் செய்யலாம். (3) இந்த, செக்ஷன்படி செய்யப்படும் விதிகள் எல்லாம் பிரசுரமானவுடன் அசெம்பிளி சட்ட சபை முன் வைக்கப்படவேண்டும். அதே கூட்டத்தில் அவ்விதிகளை மாற்றவும் திருத்தவும் அசெம்பிளி சபைக்கு உரிமை உண்டு.

செக்ஷன் 16

### 1939-ஆம் வருடச் சட்டம் ரத்தாயிற்று

1939-ஆம் வருடத்திய 8 ஆவது சென்னைச் சட்டமாகிய சென்னைப் புகையிலை விற்பனைவரி லைசென்சுச் சட்டம் இதன் மூலம் ரத்துச் செய்யப்பட்டது.

செக்ஷன் 17

---

### புகையிலைச் சட்ட அதிகாரிகள் நியமனம்

1953-ம் வருடத்திய சென்னைப் புகையிலை விற்பனை வரிப் பதிவுச் சட்டத்தில் கண்ட அதிகாரங்களை உபயோகித்துச் சென்னை சர்க்கார் கீழேகண்ட அதிகாரிகளைப் புகையிலை அதிகாரிகளாக (Tobacco Officers) நியமித்திருக்கின்றனர். அவர் அவர்களுடைய அதிகாரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவர்களாவன:—

(1) வியாபார வரி டிப்டி கமிஷனர் (Deputy Commissioner of Commercial Taxes)—இவ்வதிகாரியின் தலைமை ஆபீஸ் இருக்குமிடத்தில் தொழில் செய்யும் வியாபாரிகளுக்கு செக்ஷன் 4-ன்படி இவ்வதிகாரிதான் வரி விதிப்பார். அவர்கள் இவ்வதிகாரியிடம் தான் செக்ஷன் 3-ன்படி மனுக் கொடுத்துத் தங்களைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ள வேண்டும். (2) கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் (Commerciai Tax Officer.) இவ்வதிகாரியின் தலைமை ஆபீஸ் இருக்குமிடத்தில் தொழில் செய்யும் வியாபாரிகளுக்கு (அதாவது மேலே டிப்டி கமிஷருடைய அதிகாரத்திற் குட்பட்டவர்கள் தவிர) இவ்வதிகாரிதான் வரி விதிப்பார். அவர்களும் இவரிடம் தான் செக்ஷன் 3-ன்படி பதிவு (ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். இவ்வதிகாரி செக்ஷன் 7 (3) ன்படி கணக்குகளைக் கேட்கலாம்; ஒருவருடைய தொழில் விபரங்களைப்பற்றி செக்ஷன் 7 (4)ன்படி இவர் கேட்கலாம்; செக்ஷன் 7 (5); 11ன்படி இவர் சோதனைகள் செய்யலாம்; செக்ஷன் 13ன்படி கிரிமினல் வழக்குத் தொடரலாம். (3) டிப்டி கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் (Deputy Commercial Tax Officer) அல்லது டிப்டிகமர்சியல் டாக்ஸ் ஆபீசர் இல்லாத இடங்களில் அசிஸ்டெண்டு கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் இவருக்கு செக்ஷன் 7 (4)—7 (5)—11; 13 இவைகளின்படி மேலே கண்ட அதிகாரங்கள் உண்டு.

(4) அசிஸ்டெண்டு கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் (Assistant Commercial Tax Officer) அல்லது அவர் இல்லாத இடங்களில் டிப்டி கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்—மேலே குறிப்பிடப்பட்ட வியாபாரிகள் தவிர மற்ற வியாபாரிகள் இவ்வதிகாரியிடம் தான் செக்ஷன் 3ன்படி பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ள வேண்டும். இவருக்கு செக்ஷன் 7 (3); 7 (4); 7 (5), 11, 13 இவைகளில் கண்டிருக்கும் அதிகாரங்களும் உண்டு.

கமிஷனர் நியமனம்: இச்சட்டப்படி 'கமிஷனர்' என்ற அதிகாரியின் வேலைகளைச் செய்ய ரிவின்யூபோர்டு வியாபார வரி மெம்பர் நியமிக்கப்பட்டிருக்கிறார். வியாபார வரி டிப்டி கமிஷனர்கள் தான் இச்சட்டத்திற்கும் டிப்டி கமிஷனர்களாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

(20—4—1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I விசேஷ வெளியீடு.)

**புகையிலைச் சட்ட விதிகள்:**

**அடுத்த இதழில் விளக்கம் செய்யப்படும்.**

## விற்பனைவரி—விதிவிலக்கு கச்சாப் புகையிலைக்கு

பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 6 (1)ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, தயாரிக்கப்படாத புகையிலை விற்பனைக்கு (sales of unmanufactured Tobacco) விற்பனை வரி கிடையாதென்று சென்னை சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(8-4-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I-பக்கம் 524.)


எங்கும் புகழ் பெற்ற அற்புத சஞ்சீவி

**"ஜெயராம்" காயசுத்தி லேகியம் (Regd. No. 138512)**



**இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.**

**ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.**

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

**1 சேர் ரூ. 4–8–0 ½ சேர் ரூ. 2–4–0**

வி. பி. பி. செலவு தனி

**உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்**

தயாரிக்குமிடம்:— **ஜெயராம் வைத்தியசாலை**, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, **கும்பகோணம்.**




இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## விற்பனை வரிச் சட்ட வழக்கு. கமிஷன் ஏஜண்டும் ஒரு வியாபாரியே.

[ஆதாரம்:—1953(1) மதராஸ் லா ஜர்னல்-474]

விற்பனை வரிச் சட்டப்படி ஒரு "வியாபாரி" (Dealer) கட்டவேண்டிய வரியை கெடுவுக்குள் அவர் கட்டாவிட்டால், அவர் மீது சர்க்கார் கிரிமினல் வழக்குத் தொடரலாம். [விற்பனை வரிச் சட்டம் செக்ஷன் 15(b) ] இவ் வழக்கில், விவசாயிகளுக்காக மிளகாய் விறபனை செய்து கொடுத்த ஒரு கமிஷன் ஏஜண்டின் மீது விற்பனை வரி விதிக்கப்பட்டது. அவர் வரி கொடுக்கவில்லை. ஆகையால் அவரைச் சர்க்கார் 'பிராஸிகூட்' செய்தனர்; அதாவது, விற்பனை வரிச் சட்டப்படி அவர் மீது வரி கட்டாத குற்றத்திற்காகக் கிரிமினல் வழக்குத் தொடர்ந்தனர். இவ் வழக்கை முதலில் விசாரித்த மாஜிஸ்ட்ரேட்டானவர் எதிரியை விட்டு விட்டார். அவர் ஒரு கமிஷன் ஏஜண்டுதான் என்றும் ஆகையால் அவர் வியாபாரி அல்ல என்றும், வியாபாரிகள் மீதுதான் விற்பனை வரி விதிக்கப்படவேண்டுமே ஒழிய, வியாபாரி அல்லாதவர் மீது வரி விதித்ததே தவறு என்ற அபிப்பிராயத்தில் அவர் கிரிமினல் வழக்கைத் தள்ளி விட்டார்.

அத் தீர்ப்பின் பேரில் சர்க்கார், சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி ராமசாமி அவர்கள் அத் தீர்ப்பை ரத்துச் செய்து, எதிரிக்குத் தண்டனை அளித்தார். கமிஷன் ஏஜண்டுகளும் 'வியாபாரிகள்'தான் என்று பல நீதிபதிகள் அடங்கிய ஒரு நிறை மன்றத்தால் அவ்விதம் ஏற்கனவே ஒரு வழக்கில் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (1952(1) மதராஸ் லா ஜர்னல் 671. F. B.) அத்தீர்ப்பைத் தழுவி பிரஸ்தாப வழக்கிலும் எதிரி கமிஷன் ஏஜண்டாக இருந்தாலும் அவரும் ஒரு 'வியாபாரி' தான் என்றும், அவர் விற்பனை வரி கொடுக்கக் கடமைப்பட்டவர்தான் என்றும், அவர் கெடுப்படி வரி கொடுக்காமலிருந்தது ஒரு குற்றம்தான் என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு எதிரிக்கு ரூ. 50 அபராதத் தண்டனை விதித்தனர்.

# பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கொஞ்சம் குடும்ப முதலைக் கொண்டு ஆரம்பித்துத் தனியே நடத்திய வியாபாரம், அவருடைய தனிச் சொத்தா—அல்லது எல்லோருக்கும் பொதுவான குடும்பச் சொத்தா?

[ஆதாரம்:—66-லா வீக்லி—298.]

பிரிபடாத இந்துக் குடும்பச் சொத்துக்கள் அக்குடும்பத்தின் அங்கத்தினர்கள் யாவருக்கும் பொதுவான சொத்தாகும். ஆனால் பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தனியாகவும் சொத்துச் சம்பாதிக்கலாம். அப்படி அவர் தனியாகச் சம்பாதிக்கும் சொத்து அவருக்கு மட்டில்தான் சொந்தம். அதில் மற்றக் குடும்பத்தினர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அவர்கள் இச்சொத்தில் பாகம் கேட்க முடியாது. ஆனால் இவ்விதம் தனியாகச் சொத்துச் சம்பாதிப்பவர் அதைக் குடும்பச் சொத்துக்களின் உதவியைக் கொண்டோ, குடும்பப் பணங்களைக் கொண்டோ, சம்பாதித்திருந்தால் அவை அவருடைய தனிச் சொத்தாக ஏற்படாது. அதுவும் குடும்பப் பொதுச் சொத்துத்தான். அதாவது, பொதுக் குடும்பச் சொத்தைத் தொடாமலோ, அல்லது குடும்பத் தொகைகளை உபயோகிக்காமலோ ஒருவர் சம்பாதிக்கும் சொத்துக்கள் தான் அவருடைய தனிச் சொத்துக்களாகும் என்பதுதான் இந்தச் சட்ட விதி.

இவ் விதியானது கொஞ்சம் கடுமையாகவே பின்பற்றப்பட்டதால், சில அநீதிகள் விளைந்தன. உதாரணமாக—கோகுல் சந்த் என்பவர் ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார். அவரை அக் குடும்பத்தினர் இங்கிலாந்துக்கு அனுப்பி ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப் படிக்க வைத்தனர். கோகுல்சந்த் அப் பரீட்சையில் தேறினர். கலெக்டராக நியமிக்கப்பட்டார். ஆனல் அவர் தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து கொள்ளவில்லை. இப்படி இருக்கும் போது அக்குடும்பத்திற்குக் கடன் கொடுத்தவர் ஒருவர் தாவா செய்தார். கோகுல் சந்தையும் தாவாவில் பிரதிவாதியாகச் சேர்த்தார். அவர் கலெக்டர் முறையில் சம்பாதித்த பணங்களெல்லாம் குடும்பப் பொதுச் சொத்துக்கள் என்றும் அவை எல்லாம் தம் கடனுக்குக் கட்டுப்பட்டவை என்றும் அவர் கேட்டார். இவ்வழக்கு, பிரிவி கவுன்சில் வரை போயிற்று. பொதுக் குடும்பப் பணங்களைக் கொண்டுதான் கோகுல் சந்த் இங்கிலாந்து போய் ஐ. ஸி. எஸ். பாஸ் செய்த காரணத்தினல் அவருடைய சம்பாத்தியங்களும் பொதுக் குடும்பத்தைத்தான் சேர்ந்தவை என்றும், அவைகளும் குடும்பக் கடனுக்குக் கட்டுப்பட்டவைதான் என்றும் பிரிவி கவுன்சிலார் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்தனர். (40 மதராஸ் லா ஜர்னல் 327—பிரிவி கவுன்சில் தீர்ப்பு—பார்க்கவும்.)

இந் நிலைமையைச் சமாளிக்க, 1930இல் ஒரு சட்டம் செய்யப்பட்டது. இது தான் இந்து கல்வி வருமானச் சட்டம் (Hindu Gains of Learning Act 30 of 1930) இச் சட்டப்படி பொதுக் குடும்பச் சொத்துக்களைக் கொண்டு ஒருவர் படிக்க வைக்கப்பட்ட காரணத்தினலோ, அல்லது ஒருவர் படித்துக் கொண்டிருக்கும் போது அவர் குடும்ப ஐவேஜுகளைக் கொண்டு போஷிக்கப்பட்ட காரணத்தினலோ அவர் தம்முடைய கல்வியைக் கொண்டு சம்பாதிக்கும் ஐவேஜுகள் குடும்பப் பொதுச் சொத்தாகி விடாது—என்று இந்துச் சட்டம் மாற்றப்பட்டது.

இச் சட்டத்தின் கொள்கையை பிரஸ்தாப வழக்கில் பின்பற்றப்பட்டது. பிரஸ்தாப வழக்கின் விவரங்கள் இவைதான். ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். இளைய சகோதரருக்குக் கலியாணமானவுடன் அவர் தம் மாமனுருடைய வீட்டுடன் வேறு ஊருக்குப் போய்விட்டார். ஆனல் அங்கே அவரும் அவருடைய மைத்தனரும் சேர்ந்து ஒரு சிறிய வியாபாரம் ஆரம்பித்தனர். இவ் வியாபாரத்திற்கு அவர் தம் பொதுக் குடும்பத்திலிருந்து ரூ. 600 வாங்கி, அதை முதலின் ஒரு பாகமாகப் போட்டார். அவ் வியாபாரம் பெருகி அதிலிருந்து வேறு சொத்துக்களும் அவர் சம்பாதித்தார். அவருக்கு ரூ. 600 கொடுத்ததைத் தவிர, அவர் நடத்திய வியாபாரத்திற்கும், அவருடைய குடும்பத்திற்கும் வேறு எவ்விதமான சம்பந்தமுமில்லை. அவ் வியாபாரத்தின் லாபங்களைப் பற்றி அவர் தம் குடும்பத்திற்குக் கணக்கு கொடுக்கவுமில்லை. குடும்பத்தினரும் அவ் வியாபாரத்தைத் தங்கள் குடும்பப் பொதுச் சொத்தாகக் கருதவுமில்லை. அதை அவர்கள் கவனிக்கவுமில்லை.

இச் சந்தர்ப்பத்தில், இவ்விதம் தனி வியாபாரம் நடத்தி வந்தவர் தம்முடைய பொதுக் குடும்ப சொத்துக்களில் தமக்குப் பாகம் கிடைக்க வேண்டுமென்று ஒரு பாக வியாஜ்யம் தொடர்ந்தார். அவருடைய சகோதரர் மகன்கள் கட்சியாடினர்கள். அதாவது வாதி தனியே வியாபாரம் ஆரம்பித்தானது பொதுக் குடும்பப்

பணத்தைக் கொண்டுதான் என்றும், ஆகையால் இந்தச் சட்டப்படி அவ் வியாபாரமும் அதிலிருந்து சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களும் எல்லாம் பொதுக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும், அவைகளையும் பாகம் செய்யவேண்டுமென்றும் அவர்களுடைய கட்சி. இக் கட்சியை முதலில் இவ் வழக்கை விசாரித்த ஜில்லா ஜட்ஜ் ஏற்றுக்கொண்டார். ஆனால் அத் தீர்ப்பின் பேரில் சென்னை ஹைகோர்ட்டில் தொடுக்கப்பட்ட அப்பீலில் இரண்டு உயர் நீதிபதிகள் அக் கட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. அதாவது பொதுக் குடும்பத்திலுள்ள ஒருவருக்குக் குடும்பச் சொத்துக்களிலிருந்து கொஞ்சம் பண உதவி செய்து, அவர் தனியே போய் அப் பணத்தைக் கொண்டு தாமே ஒரு சொந்த வியாபாரம் ஆரம்பித்து, தம் பிரயாசையைக் கொண்டு சொத்துச் சம்பாதித்தால், அவருடைய வியாபாரத்தையோ, அதிலிருந்து அவர் சம்பாதிக்கும் சொத்துக்களையோ, பொதுக் குடும்பத்துக்குச் சொந்தமானவை என்று சொல்லுவது நியாயமாகாது என்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு அதன்படி தீர்ப்பளித்தனர்.

---

## கலப்புத்தடைச் சட்டத்தின் கீழ், கடைச் சிப்பந்திகளையும் தண்டிக்கலாம்.

[ஆதாரம்:—1953(1) மதராஸ் லா ஜர்னல்-475.]

சில உணவுப் பண்டங்களுடன் வேறு சரக்கைச் சேர்த்து அதைக் கெடுத்து விற்பது ஒரு குற்றமாகும். சென்னை—கலப்புத் தடைச் சட்டம் (The Madras prevention of Adulteration Act—1918) என்பது பொது மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்ட ஒரு சட்டம்.

இச் சட்டத்தின் செக்ஷன் 5 (d)ன்படி பால், வெண்ணெய், நெய் முதலியவற்றையும் சரி, மனிதன் உணவாக உபயோகிக்கக் கூடிய வேறு பண்டங்களையும் சரி, வேறு ஒன்றுடனும் கலக்காமல் சுத்தமாக ஒருவர் விற்பனை செய்யாவிட்டால் அது குற்றமாகும். உணவுப் பண்டங்கள் எவ்விதம் சுத்தமாகக் கலப்பில்லாமல் இருக்கவேண்டுமென்று விதிகள் செய்யச் சர்க்காருக்கு இச் சட்டம் அதிகாரமளித்திருக்கிறது. இதை அனுசரித்து, சர்க்காரும் பல விதிகள் செய்திருக்கின்றனர். விதி 28 E என்பது, எவரும் கேசரி பாவுடன் கடலை மாவைக் கலந்து விற்பனை செய்யக்கூடாதென்று தடை செய்கின்றது. இக் கலப்புக்களைக் கண்டுபிடித்து வழக்குக் கொண்டுவர அதிகாரிகள் இருக்கின்றனர்.

பிரஸ்தாப வழக்கில், ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஒரு கடைக்குப் போனார், அங்கே கடைக்காரரின் மகன்தான் இருந்தார். கடையைச் சேர்ந்த ஒரு கிடங்கு இருந்தது. அக்கிடங்கைத் திறந்து வைக்கும்படி ஹெல்த் இன்ஸ்பெக்டர் கேட்டதின் பேரில் கிடங்கு திறக்கப்பட்டது. அக் கிடங்கில் ஒரு வகை மாவு இருந்தது. ஹெல்த் இன்ஸ்பெக்டர் அம்மாவின் மாதிரி கொஞ்சம் எடுத்துக்கொண்டு சர்க்கார் ரசாயன பரிசோதகருக்கு அனுப்பினார். ரசாயனப் பரீட்சையில், அம்மாவானது 80 சதவிகிதம் கேசரிப் பருப்பு மாவும் 20 சதவிகிதம் கடலை மாவும், வேறு கலர் கொடுக்கும் ஒரு சரக்கும் சேர்க்கப்பட்டிருப்பதாக வெளியாயிற்று. இச் சரக்கை விற்பதும் விற்பனைக்காக வைத்திருப்பதும் (Offers for Sale) குற்றமாகையால், கடைக்காரரின் மகன் மீது சர்க்காரால் கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டது. கடையானது தகப்பனுக்குச் சொந்தமானதென்றும், தகப்பன் மீதுதான் சர்க்கார் கிரிமினல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடுமே ஒழிய மகன் மீது நடவடிக்கை எடுக்க முடியாதென்று அபிப்பிராயப்பட்டு, மாஜிஸ்ட்ரேட்டானவர் வழக்கைத் தள்ளிவிட்டார்.

அதன்பேரில், சர்க்காரால் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. கடைக்காரருக்காகக் கடையில் வேலை பார்க்கும் சிப்பந்திகளும் சரி, கடைக்காரருக்கு உதவி செய்யக் கடையிலிருப்பவர்களும் சரி, அக் கடையில் வைக்கப்பட்டிருக்கும் சரக்குகளை விற்பனை செய்யக் கோருவதுபோல்தான் ஆகுமென்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். தகப்பனுடைய கடைச் சரக்குகளை விற்பனை செய்யத்தான் அவருடைய மகன் அன்று கடையில் இருந்தார் என்றும் ஆகையால் அம் மகனும் குற்றம் செய்தவராவார் என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டுக் கடைக்காரரின் மகனுக்கு ரூ. 35 அபராதத் தண்டனை விதித்தனர். வேறு விதமாகச் சட்டம் இருந்தால், பண்டங்களைக் கலந்து விற்பனை செய்யும் ஒவ்வொரு முதலாளியும் தாம் கடைக்கே போகாமல், சிப்பந்திகளைக் கொண்டு மட்டில் கலப்புப் பண்டங்களை விற்பனை செய்து சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள இடுக்கு ஏற்பட்டுவிடுமாகையால், சட்டம் அதை அனுமதிக்க

வில்லை என்பது உயர் நீதிபதி அவர்களின் அபிப்பிராயம்.

சட்ட விரோதமான கலப்புப் பண்டங்களை விற்கும் கடையில் வேலை பார்க்கும் சிப்பந்திகள் நன்ருகக் கவனிக்க வேண்டிய தீர்ப்புகளில் இது ஒன்ருகும். 'நான் ஒரு சிப்பந்திதானே'— என்று சொன்னுல் சட்டம் அவர்களை விட்டு விடாது.

---

## ஒரு தனி நபரிடமிருந்த நிலங்களை அவரிடமிருந்து எடுத்துக் கொள்ள பீஹார் சட்டசபை ஒரு சட்டம் செய்தது. இவ்வித சட்டம் செல்லாதென சுப்ரீம்கோர்ட்டுத் தீர்ப்பு செய்தது. ஏன்?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—சுப்ரீம் கோர்ட்—215.]

இந்திய மக்களின் ஜீவாதார உரிமைகளைக் காப்பாற்றும் சில முக்கியத் தீர்ப்புகளில் இதுவும் ஒன்று. பீஹார் ராஜ்யத்தில் மகாராணி ஜானகி கௌரி என்பவருக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. ஆனுல் இந் நிலங்களை அவளுக்காக, 'கோர்ட் ஆப் வார்ட்ஸ்' மூலம் சர்க்காரே நிர்வாகம் செய்து வருகின்றனர். இப் பண்ணையைச் சேர்ந்த நிலங்கள் பல பல நபர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன. ராம பிரசாத் என்பவரும் அவருடைய சகோதரரும் சேர்ந்து சுமார் 200 ஏகர் நிலங்களைத் தங்களுக்குச் சாசுவதக் குத்தகைக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டனர். 'கோர்ட் ஆப் வார்ட்ஸ்' மானேஜர் அப்படிக் கொடுக்கலாமென்று கலெக்டருக்குச் சிபார்சு செய்தார். கலெக்டர் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனுல் ரிவின்யூ போர்டார் அவ்விதம் குத்தகைக்கு விடுவதை அங்கீகரித்தனர். ஆனுல் வழக்கம்போல் வாங்கிக் கொள்ளும் முன் பணத்தில் சரிபாதி தொகையை முன் பணமாக வாங்கிக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டனர். அப்போதிருந்த பீஹார் ராஜ்ய சர்க்காரும் இதற்கு அனுமதி கொடுத்தார்கள். அதன் பேரில் ராம பிரசாத் ரூ. 5000 கட்டினுர். நிலங்கள் அவருக்குச் சாசுவதக் குத்தகைக்கு விடப்பட்டு அதற்கான பத்திரங்களும் எழுதிக்கொள்ளப் பட்டன. வருடக் குத்தகையும் ரூ. 797 சொச்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ராமபிரசாதிடம் நிலங்களும் 1946இல் சுவாதீனம் விடப்பட்டன.

இவ்விதம் நிலங்களை ராமபிரசாத் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அனுபவித்து வருகையில், அவருக்கு இக் குத்தகை கொடுத்தது தவறு என்று ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. இவ் விஷயமானது எப்படியோ காங்கிரஸ் மகா சபையின் காரியக் கமிட்டியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. காங்கிரஸ் காரியக் கமிட்டியும், ராம பிரசாதுக்குக் குத்தகை கொடுத்தது பொது நல நன்மைக்கு விரோதமானதென்று அபிப்பிராயப்பட்டு, அக் குத்தகையை ரத்துச் செய்யப் பீஹார் சர்க்கார் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்தது. அதன் பேரில் புதிய பீஹார் சர்க்கார் 1950இல் ஒரு சட்டம் கொண்டு வந்தனர். பீஹார் சட்டசபையும் இச் சட்டத்தை ஏற்றுக்கொண்டது. இச் சட்ட ஷரத்துக்கள் என்னவென்ருல்—வேறு எந்தச் சட்டம் எப்படி இருந்தாலும் 18—11—1946இல் ராமபிரசாதுக்கும் அவருடைய சகோதரருக்கும் கோர்ட் ஆப் வார்ட்சால் கொடுக்கப்பட்ட குத்தகையானது செல்லாதென்றும்; குத்தகைதாரர்கள் அச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலேயே குத்தகை நிலங்களை விட்டுவிட வேண்டுமென்றும், அப்படி அவர்கள் விடாவிட்டால், ஜில்லா கலெக்டர் அவர்களை அப்புறப்படுத்தி நிலங்களைச் சுவாதீனம் எடுத்துக் கொள்ளலாமென்றும்—அச் சட்ட ஷரத்துக்கள் இருந்தன.

இச் சட்டம் செல்லாதெனவும், அச்சட்டப்படி பீஹார் சர்க்கார் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் தடுத்துவிட வேண்டுமென்றும் கோரி ராமபிரசாதும் அவருடைய சகோதரரும் பாட்ஞ ஹைகோர்ட்டுக்கு ஒரு 'ரிட்' மனு செய்து கொண்டனர். பாட்ஞ ஹைகோர்ட்டார் அம் மனுவைத் தள்ளிவிட்டனர். அதன் பேரில் ராமபிரசாதும் அவருடைய சகோதரரும் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

சுப்ரீம் கோர்ட்டார் இச் சட்டம் செல்லாதென அபிப்பிராயப்பட்டனர். இரண்டு தனி நபர்களுக்குள் ஏற்படும் விவகாரங்களை நீதி மன்றங்களல்லவா விசாரித்து முடிவு செய்ய வேண்டுமென்பது சட்டம். ராம பிரசாதுக்குக் கோர்ட் ஆப் வார்ட்ஸார் கொடுத்த குத்தகையானது செல்லுமா செல்லாதா என்று கோர்ட்டுகளல்லவா தீர்மானம் செய்ய வேண்டும்? மக்கள் யாவருக்கும் அதுதானே சட்டம்? அப்படி இருக்க ராம பிரசாதும் அவருடைய சகோதரர் இவ்விருவர்கள் மட்டில் கோர்ட்டுக்குப் போய்த் தங்கள் பாத்தியங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் அவ்விருவரை மட்டில் தடை செய்யும் இச் சட்டமானது இவ்விருவருக்கும் பாரபட்சம் காண்பிக்கும் ஒரு

சட்டமாகும்; மற்ற மக்கள் யாவருக்கும் உள்ள ஒரு உரிமை.—அதாவது நீதிமன்றங்களில் தங்கள் தங்கள் பாத்தியா பாத்தியங்களைக் கட்சிபாடித் தீர்த்துக்கொள்ளும் இவ்வுரிமை யானது ராமபிரசாதுக்கும் அவருடைய சகோதரருக்கும் மட்டில் கிடையாதெனச் சொல்லும் இச்சட்டமானது—மக்களுக்குச் சம பாதுகாப்பு அளிப்பதை மறுக்கும் ஒரு சட்டமாகும்.

"சட்டத்திற்கு முன் யாவரும் சமம்—சட்டமானது யாவருக்கும் சமமான பாதுகாப்பு அளிக்கவேண்டும்"—என்று நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 14-ஆவது ஷரத்தில் கண்டிருக்கும் மக்களின் ஜீவாதார உரிமைக்கு முரணான இச் சட்டம் செல்லாதெனச் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஐவரும் அபிப்பிராய பேதமில்லாமல் இவ் வழக்கில் தீர்ப்பளித்தனர்.

## நமது நீதிபரிபாலன முறையிலும் தமக்குத்தாமே நீதி வழங்கிக்கொள்வது என்பது அனுமதிக்கப்படவில்லை. மோட்டார் பர்மிட் வழக்கு.

*[ஆதாரம்:—1953 (1) மதராஸ் லா ஜர்னல் 533.]*

நாகரிகமடைந்த நீதிபரி பாலன முறையில் இரண்டு அடிப்படைக் கொள்கைகள் இருக்கின்றன. அதாவது, தம்முடைய வழக்கில் ஒருவர் தாமே நீதி வழங்கிக் கொள்ளுவது எச்சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கப்பட வில்லை—என்பது ஒன்று. (No man shall be a Judge in his own cause.) இரண்டாவதாக உண்மையில் நியாயம் வழங்கப்படுவது மட்டில் போதாது; வெளிப்பார்வைக்கும் சந்தேகமற நியாயம் வழங்குவது காணப்பட வேண்டும். (Justice should not only be done, but manifestly and undoubtedly seem to be done.)—என்பது இரண்டாவது முக்கியமான கொள்கை.

இவ்விரண்டு கொள்கைகளையும் ஆதாரமாகக் கொண்டு, பஸ் ஸர்விஸ்விட மோட்டார் பர்மிட்டுகள் வழங்கிய விசாகபட்டணம் 'ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரடி'யின் உத்தரவுகள் சென்னை ஹைகோர்ட்டால் ரத்து செய்யப்பட்டன.

மோட்டார் சட்டப்படி நியமிக்கப்பட்டிருக்கும் விசாகபட்டணம் 'ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரடி' என்ற சபைக்கு ஜில்லா கலெக்டர் தான் தலைவர். ஒவ்வொரு ரூட்டுக்கும் 'பஸ்'விடவேண்டுமென்று மனுப்போட்டிருக்கும் பல நபர்களுள், யார் யாருக்குப் 'பர்மிட்' கொடுக்க வேண்டுமென்று ஆலோசனை செய்து முடிவு செய்யவேண்டியது இச்சபையின் கடமையாகும். வழக்குகளை விசாரணை செய்து நீதி வழங்கும் நீதிபதிகளைப் போலத்தான் இவர்களும் பல மனுதார்களுடைய தகுதியையும் யோக்கியதாம்சங்களையும் ஆதாரங்களுடன் ஆராய்ந்த பிறகே, ஒரு முடிவுக்கு வரவேண்டும். இவர்களிடம் பஸ் பர்மிட் வேண்டுமென்று மனுப்போட்டவர்களுள் ஜில்லா மாஜி ராணுவத்தினரின் கூட்டுறவு சங்கமும் ஒன்று. அச்சங்கத்திற்கும் அதே ஜில்லா கலெக்டர்தான் தலைவர். அதாவது கூட்டுறவு சங்கத் தலைவர் என்ற முறையில் கலெக்டர் பஸ் பர்மிட் வேண்டுமென்று கேட்கும் மனுவை, 'ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரடி'—என்ற சபையின் தலைவர் முறைமையில் அதே ஜில்லா கலெக்டரே பரிசீலனை செய்து தீர்ப்பு செய்யும் நிலைமை ஏற்பட்டது. கடைசியில் கூட்டுறவு சங்கத்துக்கே தான் பர்மிட் கொடுக்கப்பட்டது.

பர்மிட் கேட்டு, தோல்வியடைந்த மற்ற மனுதார்கள் இதை ஆட்சேபித்து சென்னை ஹைகோர்ட்டில் 'ரிட்' மனுக் கொடுத்தனர். முதலில் 'ரிட்' மனுவை விசாரித்த உயர் நீதிபதி சுப்பராவ் அவர்கள் இந்த ஆட்சேபனையை ஏற்றுக் கொண்டனர். அதாவது ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரடி சபையின் நடவடிக்கைகளில், வேறு ஹோதாவில் ஒரு மனுதாரராக இருந்த ஜில்லா கலெக்டர் பங்கெடுத்துக் கொண்டதால் அச்சபை செய்த முடிவுகள் செல்லாதென அபிப்பிராயப் பட்டனர். அதன் பேரில் ஏற்பட்ட 'லெடர்ஸ்பேடண்ட்' அப்பீலிலும் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும் உயர் நீதிபதி வெங்கடராம அய்யர் அவர்களும் அதே விதம் அபிப்பிராயப் பட்டு டிரான்ஸ் போர்ட் அதாரடி செய்தது செல்லாதென தீர்ப்பளித்தனர்.

# சோதனை செய்யவந்த ஷாப் இன்ஸ்பெக்டரை பலாத்காரமாக வெளியே தள்ளிய மளிகைக் கடைக்காரர் மீது கிரிமினல் வழக்கு. அவர் செய்தது தற்காப்பாகுமா?

திருநெல்வேலி ஜில்லா உதங்குடி ஒரு மேஜர் பஞ்சாயத்து. அங்கே ஷாப் சட்டம் உண்டு. அவ்வூரில் தகப்பனும் மகனும் ஒரு மளிகைக் கடை நடத்தி வந்தனர். 5—2—1951 திங்கள் கிழமை இரவு 10-30 மணிக்கு அவ்வூர் ஷாப் இன்ஸ்பெக்டர் அக்கடைக்கு வந்தார். ஏதாவது விதி விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலொழிய, ஷாப் சட்டப்படி, கடைகளை இரவு 10 மணிக்குமேல் திறந்து வைத்திருக்கக்கூடாது. இக்கடையானது மணி 10-30க்குத் திறந்து வைக்கப் பட்டிருக்கும் விஷயத்தை ஷாப் சட்டப்படி கடைக்காரர் வைத்துக் கொள்ள வேண்டிய இன்ஸ்பெக்ஷன் புத்தகத்தில் குறிக்க வேண்டுமென்று ஷாப் இன்ஸ்பெக்டர் விரும்பினார். ஆனால் அக்கடையிலிருந்த கடியாரமானது மணி 9-20 தான் காண்பித்தது. இவ் விஷயத்தையும் இன்ஸ்பெக்ஷன் ரிஜிஸ்டரில் குறிக்கவேண்டுமென்று கடைக்காரர் ஷாப் இன்ஸ்பெக்டரிடம் சொன்னார். இது விஷயமாக ஷாப் இன்ஸ்பெக்டருக்கும் கடைக்காரர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. கைகலந்தது. கடைக்காரர் ஷாப் இன்ஸ்பெக்டரின் மார்பைப் பிடித்து வெளியே தள்ளினார். கடைக்காரரின் மகன் ஷாப் இன்ஸ்பெக்டர் கையிலிருந்த இன்ஸ்பெக்ஷன் ரிஜிஸ்டரைப் பிடுங்கிக்கொண்டு, இன்ஸ்பெக்டரைத் திட்டினார். கூட்டம் கூடிற்று. ஷாப் இன்ஸ்பெக்டர் நகர்ந்து விட்டார். மறுநாள் இவ்விஷயத்தை அவர் தம்முடைய மேல் அதிகாரிக்குத் தந்தி மூலம் தெரிவித்தார். போலீஸ் சப்இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ரிபோர்ட் அனுப்பினார். போலீசார், கடைக்காரர் மீதும் அவருடைய மகன் மீதும் இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைப் பற்றிய சட்டத்தின் செக்ஷன் 353-ன்படி கிரிமினல் வழக்குத் தொடர்ந்தனர். அதாவது தம் கடமையைச் செய்யும் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரை, அதைச் செய்ய வொட்டாமல் இக்கடைக்காரர்கள் பலாத்காரமாகத் தடுத்தனர் என்ற குற்றம். இக்குற்றத்திற்கு இரண்டு வருடம் வரை சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இச்சம்பவம் அவ்விதம் நடக்கவே இல்லை என்பது தான் கடைக்காரர்களின் கட்சி. ஆனால் இதை சப்மாஜிஸ்ட்ரேட்டும் சரி, அப்பீலை விசாரித்த சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டும் சரி நம்பவில்லை. எதிரிகள் இருவரும் குற்றம் செய்ததாகத் தீர்மானித்து ஒவ்வொருவருக்கும் ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது. எதிரிகள் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர், ஹைகோர்ட்டிலும் கடைக்காரர்கள் செய்தது சட்டப்படி பார்க்கப் போனால் குற்றம்தான் என்றும், ஆனால் ஷாப் இன்ஸ்பெக்டரும் புத்திசாலித் தனமாகவோ மரியாதையாகவோ நடந்து கொள்ளவில்லை என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு எதிரிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 5—0—0 மட்டில் அபராதம் விதித்தனர்.

ஹைகோர்ட்டில் எதிரிகளுக்காக வாதாடப்பட்ட ஒரு சட்டக் கட்சியை உயர் நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதாவது எதிரிகள் செய்த செய்கைகள் எல்லாம், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக, அதாவது தற்காப்புக்காக, சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட செய்கைகளாகையால் அவை குற்றமாகாதென்பது தான் இக்கட்சி.

குற்றங்களைப் பற்றிய இந்தியன் பீனல் கோடு என்ற சட்டத்தில் 'தற்காப்பு' என்பதைப் பற்றி சில ஷரத்துக்கள் இருக்கின்றன.

இவ்விஷயம் அச்சட்டத்தின் 96 முதல் 106 வரை உள்ள செக்ஷன்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் தம்முடைய சரீரத்தையோ, சொத்து சுதந்தரங்களையோ காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவே இவ்விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருவர் உங்களிடம் எந்த

அக்கிரமங்கள் செய்தாலும் அவற்றை நீங்கள் கோழைத் தனமாகப் பொறுத்துக் கொண்டிருந்து பிறகு தான் அவர்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நமது சட்டம் வற்புறுத்தவில்லை. சட்டத்தால் அனுமதிக்கப் பட்டிருக்கும் தற்காப்பு உரிமையை சுதந்தர நாட்டின் பிரஜைகள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமென்பதேதான் சில நீதிபதிகளின் அபிப்பிராயமும். (1929 அலகாபாத் 897-பார்க்கவும்.) உங்களை ஒருவர் தாக்கினல் நீங்கள் ஓடிவிடவேண்டுமென்பதில்லை; நீங்கள் திருப்பி அவரைத் தாக்குவதன் மூலம் உங்களைப் பாதுகாற்றுக் கொள்ளுவதைச் சட்டம் அனுமதிக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் நீங்கள் செய்வது குற்றமாகாது. ஆனல் தற்காப்புக்காக மட்டில் எவ்வளவுதூரம் உங்கள் எதிரியைத் தாக்க வேண்டுமோ அதற்கு மேற்பட்டு ஒன்றும் நீங்கள் செய்யக்கூடாது. இவ்விதிக்கும் ஒரு விதிவிலக்கு இருக்கிறது.

அதாவது சட்டங்களை அமுல் நடத்தும் சர்க்கார் அதிகாரிகள், சட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன், ஒரு காரியம் செய்யும்போது கொஞ்சம் சட்ட விரோதமான காரியங்களை அவர்கள் செய்து விட்டாலும், அதைப் பொருத்து எவருக்கும் தற்காப்பு உரிமை கிடையாது என்பதுதான் இந்தியன் பீனல்கோடு சட்டத்தின் செக்ஷன் 99. கடைக்காரர்களுடைய கட்சி இது தான். அதாவது ஷாப் இன்ஸ்பெக்டர் தங்களுடைய கடைக்கு வந்தது 5—2—1951 தினம். அன்று திங்கள் கிழமை. உதங்குடியில் திங்கள் கிழமை சந்தை தினம். சந்தை தினங்களில் உதங்குடிக் கடைகள் இரவு 11 மணி வரை திறந்து வைத்திருக்கலாமென்று சர்க்கார் விதி விலக்கு அளித்திருக்கின்றனர். இவ்விதி விலக்கு அன்று தினம் ஷாப் இன்ஸ்பெக்டருக்கும் தெரியாது. கடைக்காரருக்கும் தெரியாது. (30—1—1951 தேதி கெஜட்டில் இச்சர்க்கார் உத்தரவு பிரசுரமாகி இருக்கிறது. 1951 "வக்கீல்" மார்சு மாத இதழ் பக்கம் 8-பார்க்கவும்.) ஆகையால் அன்று இரவு 10-30 மணிக்கு கடைதிறந்து வைத்திருப்பது குற்றமல்ல ஷாப் இன்ஸ்பெக்டர் அன்று சோதனைக்கு வந்ததுதான் சட்ட விரோதம். சட்ட விரோதமாக நடக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தரைத் தடுத்து தள்ளிவிட தமக்கு தற்காப்பு உரிமை இருக்கிறதென்றும், அப்படிச் செய்தது குற்றமாக மாட்டாதென்றும் கடைக்காரர்களுக்காக வாதாடப்பட்டது. இக்கட்சியை உயர் நீதிபதி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏனென்ருல் எதிரிகள் இரவு 11-மணி வரை கடை மூடாமல் வைத்திருக்கலாமென்ருலும், அப்பொழுதும் கூடகடைக்கு வரவும், நேரத்தைப் புத்தகத்தில் பதிவு செய்யவும், ஷாப் சட்டப்படி, ஷாப் இன்ஸ்பெக்டருக்கு உரிமை உண்டு. அவர் அப்படிச் செய்வது சட்ட விரோதமல்ல, இரண்டாவதாக நல்லெண்ணத்துடன் தம் கடமையைச் சட்டப்படி செலுத்துவதாக எண்ணிக் கொண்டு காரியம் செய்யும் சர்க்கார் ஊழியர்கள் சட்டத்தால் அனுமதிக்கப்படாத ஒரு காரியத்தைச் செய்தால் கூட அவரை பலாத்காரமாகத் தடுக்கவோ, தற்காப்புக்காக அவரை எதிர்ப்பதற்கோ எவருக்கும் பீனல்கோடு சட்டத்தின் செக்ஷன் 99ல் கண்டபடி உரிமை கிடையாதென உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு எதிரிகள் செய்தது குற்றம்தான் என்று தீர்ப்பளித்தனர். ஆனுல் ஷாப் இன்ஸ்பெக்டர் மரியாதை இல்லாமலும் சாமர்த்தியமில்லாமலும் நடந்துவிட்டார் என்றும், சமூகச் சட்டங்களை அமுல் நடத்தும் சர்க்கார் சிப்பந்திகள் எப்படி மக்களிடம் நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் உயர் நீதிபதி அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இந்த வழக்கைச் சர்க்கார் தொடர்ந்திருக்கவே கூடாதென்றும் நீதிபதி அவர்களின் அபிப்பிராயம். இருந்தாலும் எதிரிகள் செய்தது குற்றம் குற்றம்தான் என, ஒவ்வொருவருக்கும் அபராதம் ரூ. 5 ஆக குறைக்கப்பட்டது.



# சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் – 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

*சென்றமாத இதழில் 'ஆடிட்டர்கள்' என்ற தணிக்கை உத்தியோகஸ்தர்களை நியமித்து, பஞ்சாயத்துக்களின் கணக்குகளை வருடாவருடம் தணிக்கை செய்வது பற்றியும்; பொதுஜன பந்தோபஸ்து வசதி ஆரோக்கியம் இவைபற்றி, பஞ்சாயத்தின் உரிமைகளும் அதிகாரங்களும் என்ன என்பது பற்றிய பஞ்சாயத்துச் சட்ட ஷரத்துக்களைப்பற்றியும் பொது மார்க்கெட்டுகள் சொந்த மார்க்கெட்டுகள் பற்றிய பஞ்சாயத்துச் சட்ட ஷரத்துக்களும் விளக்கப்பட்டன.*

### லைசென்சு கொடுக்கப்படாத சொந்த மார்க்கெட்டுகளில் எவரும் விற்பனை செய்யக்கூடாது.

செக்ஷன் 84

பொது மார்க்கெட்டுகளில் நிர்வாக அதிகாரியின் அனுமதி இல்லாமலும், லைசென்சு பெற்ற சொந்த மார்க்கெட்டுகளில் லைசென்சுதாருடைய அனுமதி இல்லாமலும், எவரும் எந்தச் சரக்கையோ, பிராணியையோ விற்கவும் கூடாது; விற்பனைக்காக வைத்திருக்கவும் கூடாது. லைசென்சு இல்லாத சொந்த மார்க்கெட்டுகளில் எவரும் எந்தச் சரக்கையோ பிராணியையோ விற்கவும் கூடாது; விற்பனைக்காக வைத்திருக்கவும் கூடாது.

### பொது ரஸ்தாக்களில் விற்பனை செய்யக்கூடாது

பொது ரஸ்தாக்களிலும், பொது இடங்களிலும் எவரும் எவ்விதமான சரக்கையோ பிராணியையோ விற்பனை செய்யக்கூடாதென்றும், விற்பனைக்காக வைத்திருக்கக்கூடாதென்றும் நிர்வாக அதிகாரியானவர் பஞ்சாயத்தின் அனுமதி பெற்று, பகிரங்கமாக விளம்பரம் செய்து தடுத்துவிடலாம்; அல்லது அவ்விதம் செய்ய லைசென்சு கொடுக்கவும், அவ்விதம் செய்வதை ஒழுங்கு படுத்தவும் பஞ்சாயத்தின் அனுமதியின் பேரில் நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

### மார்க்கெட்டுகளை 'ஜில்லா மார்க்கெட்டுகள்' என்றும் 'பஞ்சாயத்து மார்க்கெட்டுகள்' என்றும் சர்க்கார் தரம் பிரிக்கலாம்.

செக்ஷன் 86

ஒரு கிராமத்திலிருக்கும் பொது மார்க்கெட்டுகளையும் சரி, சொந்த மார்க்கெட்டுகளையும் சரி 'ஜில்லா மார்க்கெட்' என்றோ, 'பஞ்சாயத்து மார்க்கெட்' என்றோ தரம் பிரிக்கச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அப்படி தரம் பிரிக்கப்பட்ட மார்க்கெட்டை யார் மேல் விசாரணை செய்யவேண்டுமென்றும், அம்மார்க்கெட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் ஜில்லா போர்டுக்கு எவ்வளவு பாகம் பஞ்சாயத்துக்கு எவ்வளவு பாகம் கொடுக்கப்பட வேண்டுமென்பதையும்; அல்லது ஜில்லா போர்டுக்கோ பஞ்சாயத்துக்கோ எவ்வளவு சகாயத் தொகை கொடுக்கப்பட வேண்டுமென்பதையும்

நிர்ணயம் செய்யவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

'ஜில்லா மார்க்கெட்டுகள்' என்று தரம் பிரிக்கப்பட்ட மார்க் கெட்டுக்கள் சம்பந்தப்பட்ட வரையில், இச்சட்டத்தின் 80 முதல் 85 வரையில் உள்ள செக்ஷன் களில் கண்டிருக்கும் எந்த அதிகாரங் களையும் பஞ்சாயததோ அல்லது பஞ்சா யத்தின் நிர்வாக அதிகாரியோ செலுத்த முடியாது.

### சொந்த மார்க்கெட்டுக்காரர்கள் வைத்துக் கொள்ளவேண்டிய கணக்குகள், அவைகளைத் தணிக்கை செய்வது, சோதனை செய்வது பற்றிய விதிகள்.

21-8-1951 சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் 1A ரூல் சப்ளி மெண்ட்-பக்கம் 187

1. சொந்த மார்க்கெட்டுகளின் சொந் தக்காரர்களும், அவற்றை நடத்து கிறவர்களும், அவற்றை குத்தகைக்கு எடுத்திருப்பவர் களும் அம்மார்க்கெட்டுகளை உபயோகப்படுத்துவதற் காகத் தினசரி வசூலிக்கும் தொகைகளுக்கு 'டிக்கெட்டு கள்' கொடுக்க வேண்டும்; குறித்த கெடுக்களில் வசூல் செய்யப்படும் தொகைகளுக்கும் ரசீதுகள் கொடுக்கவேண்டும். (2) ரசீதுகளும் டிக்கெட் புத்தகங்களும் நமூனு 1, 2 இன்படி அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். (3) ஒவ்வொரு கட்டண விகிதத்திற்கும் தனித்தனி டிக்கெட் புத்தகங்கள் அச் சடிக்கப்படவேண்டும். (4) சொந்தமார்க் கெட்டுகளின் சொந்தக்காரர்களும், அவற்றை நடத்துகிறவர்களும், அவற் றைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர்களும் மார்க்கெட்டுகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களைப் பற்றியும், அவைகளைப் பராமரிப்பதற்கான செலவுகளைப் பற்றி யும், உண்மையாகவும் விவரமாகவும் கணக்குகள் வைத்துக் கொள்ளவேண்டும். பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியோ, அவரிடம் அதிகாரம் பெற்றவரோ இக் கணக்குகளைச் சோதனை செய்யவேண்டு மென்றோ, சரிபார்க்கவேண்டு மென்றோ, தணிக்கை செய்யவேண்டு மென்றோ கேட்டால் அவைகளைத் தாகல் செய்ய வேண்டும். (5) வசூல் கணக்குப் புத்தக மும், செலவுக் கணக்குப் புத்தகமும் நமூனு 3, 4 இன்படி இருக்கவேண்டும். இப்புத்தகங்களையும், டிக்கெட் புத்தகங் களையும் ரசீதுப் புத்தகங்களையும் பஞ்சா யத்தின் நிர்வாக அதிகாரியோ, அவரிடம் அதிகாரம் பெற்ற வேறு அதிகாரியோ குறைந்தது மாதம் ஒரு முறையாவது ஒத்துப்பார்க்க வேண்டும்; ஏதாவது குறிப்புகள் எழுதவேண்டி யிருந்தால் அவற்றை எழுதவேண்டும்; கணக்குகள் சரியாக இருந்தால் அவை சரியாக இருக் கிறதென்றும் அவற்றில் எழுதப்பட வேண்டும். (6) சொந்தமார்க்கெட்டு களைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று கோரி லைசென்சைப் புதுப்பிக்கப் போடப்படும் மனுக்களுடன், அம்மார்க் கெட்டுபற்றி அதற்கு முன்பு உள்ள 12 மாதங்களின் வரவு செலவுக் கணக்கு விவரம் அனுப்பப் படவேண்டும். லைசென் சைப் புதுப்பிக்கு முன், பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் அக்கணக்கை, சொந்தமார்க்கெட் காரரின் கணக்குப் புத்தகங்களுடன் ஒத்து, சரி பார்த்த பிறகே லைசென்சைப் புதுப்பிக்க வேண் டும். நமூனு 1-ரசீது; நமூனு 2-டிக்கெட்; நமூனு 3-வசூல் கணக்கு; நமூனு 4— செலவுக் கணக்கு.

### பொது வண்டி ஸ்டாண்டுகள் முதலியவை

இச் சட்டப்படி ஏற்படும் விதிகளுக்குட் பட்டு, பஞ்சாயத்தானது—(a) பொது

செக்ஷன் 87

வான இறங்கு மிடங்களை யும், தங்கு மிடங்களையும் வண்டி நிற்குமிடங்களையும் ஏற்படுத்தலாம்; அந்த இடங்களை உப யோகிப்பதற்காகக் கட்டணமும் விதிக்க லாம். 'வண்டி நிற்குமிடம்'—என்பதில் மோட்டார் வண்டிகள் உள்பட எவ்வித மான வண்டிகள் நிற்குமிடங்களும், அடங்கும். (b) அவ்வித இடங்கள் ஏற் படுத்தப்பட்ட பிறகு, அந்த இடங்களி லிருந்து எவ்வளவு தூரத்துக்குள்ளாக இருக்கும் வேறு பொது ரஸ்தாக்களையும் அவற்றின் பக்கங்களையும் எவரும் அதே காரியத்துக்காக உபயோகித்துக் கொள் ளக் கூடாதென்று தடுக்க இன்ஸ்பெக்ட

ருடைய மேல் விசாரணைக்குட்பட்டுப் பஞ்சாயத்துக்கு உரிமை உண்டு.

## சொந்த வண்டி ஸ்டாண்டுகள்

(1) பஞ்சாயத்திலிடம் லைசென்சு வாங்கிக்கொள்ளாமல் எவரும் புதிதாகச் சொந்த வண்டி ஸ்டாண்டு செக்ஷன் 88 களை ஏற்படுத்தவும் கூடாது; சொந்த வண்டி ஸ்டாண்டுகளை லைசென்சில்லாமல் திறந்து வைத்துக் கொள்ளவும் கூடாது. ஒவ்வொரு வருடமும் லைசென்சு புதுப்பிக்கப்பட வேண்டும்.

(2) ஏற்கனவே ஏற்பட்டுள்ள சொந்த வண்டி ஸ்டாண்டுகளுக்குப் பஞ்சாயத்தானது கட்டாயமாக லைசென்சு கொடுக்க வேண்டும்; புதிதாகச் சொந்த வண்டி ஸ்டாண்டு ஏற்படுத்த பஞ்சாயத்துக்குப் போடப்படும் மனுவின் பேரில் பஞ்சாயத்து இஷ்டப்பட்டால் லைசென்சு கொடுக்கலாம்; லைசென்சு கொடுக்க மறுக்கவும் பஞ்சாயத்துக்கு உரிமை உண்டு. லைசென்சு கொடுக்கும் விஷயத்தில், மேற்பார்வை, சோதனை, குப்பை கூளமில்லாமல் சுத்தமாக வைத்திருப்பது மேலும் விதிகளால் நிர்ணயிக்கப்படும் மற்ற விஷயங்கள்-இவை பற்றிய நிபந்தனைகளுக்குட்பட்டுப் பஞ்சாயத்தானது மேலே கண்ட லைசென்சுகளைக் கொடுக்கலாம்.

(3) லைசென்சில் கண்ட நிபந்தனைகளைக் குறிப்பிட்ட தேதி முதல் அமுலுக்கு வரும்படி மாற்றவும் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

(4) மேலே 2-ஆவது உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட லைசென்சின் நிபந்தனைகள் மீறப்பட்டால், லைசென்சைச் சிறிது காலம் அமுலில் இல்லாமல் நிறுத்தி வைக்கவும், (அதாவது சஸ்பெண்டு செய்யவும்) அல்லது ரத்துச் செய்யவும், பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

(5) இந்தச் செக்ஷன்படி கொடுக்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் லைசென்சு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 200க்கு அதிகப்படாத ஒரு கட்டணத்தை விதிக்கவும் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

## ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொது இடங்கள்

ஆடு மாடு முதலியவை அடிப்பதற்காகப் பொதுத் தொட்டிகளை ஏற்படுத்த செக்ஷன் 89 வும், அவைகளுக்கு வாடகைகளும் கட்டணங்களும் விதித்து வசூல் செய்யவும் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

கீழே கண்ட விஷயங்களைப் பற்றிச் சர்க்கார் விதிகள் செய்யலாம். அவை செக்ஷன் 90 யாவன:—(a) பொதுத் தொட்டிகளைத் தவிர, வேறு இடங்களில் குறிப்பிட்ட பிராணிகளை அடிக்கவோ, துண்டு போடவோ தோலை உரிக்கவோ கூடாதென்று தடுக்கவும், அல்லது அப்படிச் செய்வதை ஒழுங்கு படுத்தவும், எந்தச் சந்தர்ப்பங்களில் அவ்விதம் செய்யலாமென்று விதிவிலக்கு அளிக்கவும், விதிகள் செய்யலாம். (b) பொது ஜனங்களுக்கு விற்பனை செய்வதற்காக விதிகளில் கண்ட பிராணிகளை அடிப்பதற்காக லைசென்சு கொடுப்பது பற்றி விதிகள் செய்யலாம். (c) ஆடுமாடு அடிக்கிற தொட்டிகளையும் அவைகளிலுள்ள மாமிசத்தையும் சோதனை செய்யவும், சோதனை அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தைப் பற்றியும் விதிகள் செய்யலாம்.

[தொடரும்]

# பஞ்சாயத்துத் தேர்தல் மனு விதிகள்

*கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல் தகராறுகளைப் பற்றிய விதிகள் 5—6—1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட்—பாகம் IA பக்கம் 109இல் ஆரம்பிக்கும் அறிக்கைகளில் 8-ஆவது அறிக்கையாகப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு:—*

## தேர்தல் மனு

பஞ்சாயத்து மெம்பர் தேர்தலையோ, தலைவர் அல்லது உபதலைவரின் தேர்தலையோ ஆட்சேபிக்க வேண்டுமானால், இவ்விதிகளின்படி தேர்தல் மனு அல்லது 'எலெக்ஷன் பெட்டிஷன்' மூலம் தான் ஆட்சேபிக்கவேண்டும். தேர்தல் மனுவை எந்த அபேட்சகரும் போடலாம்; எந்த வாக்காளரும் போடலாம். எந்த அபேட்சகர் அல்லது அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனரோ, அவர்கள் மீது தான் தேர்தல் மனுப் போட வேண்டும். பஞ்சாயத்து ஆபீஸ் இருக்கும் இடத்திற்கு அதிகாரமுள்ள டிஸ்ட்டிரிக்ட் முன்ஸிப் தான் 'எலெக்ஷன் கமிஷ'னராகையால் அவரிடம் தான் எலெக்ஷன் மனுக்கள் தாகல் செய்யப்பட வேண்டும். அந்த இடத்திற்குப் பல டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புகள் இருந்தால் பிரதான முன்சீப்பே தான் எலெக்ஷன் கமிஷனராவார். வேறு அதிகாரிகளையும் குறிப்பிட்ட இடங்களில் எலெக்ஷன் கமிஷனராக நியமிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி நியமிக்கப் பட்டிருக்கும் இடங்களில் மட்டில் அவ்வதிகாரியிடம் தான் எலெக்ஷன் மனுக்களைக் கொடுக்கவேண்டும். ஒரு முன்சீப்பிடம் கொடுக்கப்படும் எலெக்ஷன் மனுவை வேறு முன்சீப்புக்கு மாற்ற ஜில்லா ஜட்ஜுக்கு அதிகாரமுண்டு.

## 15 நாட்களுக்குள் மனுப்போட வேண்டும்

தேர்தல் முடிவு பிரகடனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கண்டபடி தேர்தல் மனுக்கள் கொடுக்கப்பட வேண்டும். மேற்கண்ட 15 நாட்களின் கடைசி தினத்தில், முன்சீப் கோர்ட்டானது மூடப்பட் டிருந்தால் மறுபடியும் கோர்ட் திறக்கும் தினத்தன்று இம் மனுவைக் கொடுக்கலாம். மனுவுடன் மனுதார், செலவுத்தொகைக்கு ரொக்க ஜாமீனைக் கட்டவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட அதிக நபர்களின் தேர்தல் ஆட்சேபிக்கப்பட்டால், ஒவ்வொரு நபருக்கும் ரூ. 25 வீதம் ரொக்க ஜாமீன் கட்டப்பட வேண்டும். ஜாமீன் கட்டாத மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. மனுவில் விவரங்கள் சொல்லப்படவேண்டும். தேர்தல் குற்றங்களோ ஊழல்களோ நடந்திருப்பதாகப் புகார் செய்ய வேண்டுமானால் அவைகளின் விவரங்கள் மனுவில் பூரணமாகக் கண்டிருக்க வேண்டும்.

## தேர்தலை ரத்துச் செய்யக் காரணங்கள்

கீழே கண்ட விஷயங்கள் ருசுவானால் தேர்தல் ரத்துச் செய்யப்படலாம். அவை யாவன:—(a) தேர்தலில் ஜயித்தவரோ, அவருடைய ஏஜண்டோ, இவர்களுடைய ஒற்றுமையின் பேரில் வேறு ஒருவரோ, இந்தியன் பீனல்கோடு 9A அத்தியாயத்தில் கண்டிருக்கும் தேர்தல் குற்றங்களைச் செய்திருந்தாலும், செய்ய உடந்தையாக இருந்தாலும், தேர்தல் ரகசியங்களைப் பற்றிய விதிகளை இவர்கள் மீறி இருந்தாலும் (b) மேலே கண்ட தேர்தல் குற்றங்கள் நடந்ததாலோ; அல்லது, வாக்காளரை 'வோட்' போடும் இடத்திற்கு அழைத்துப்போக வண்டிச் சத்தம் கொடுத்தாலோ அல்லது கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாலோ; அல்லது வாடகை வண்டி, முதலியவற்றை அமர்த்தியதாலோ, ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று ஏற்பட்டாலும் சரி, அதனால் தேர்தலின் போக்கே பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி (c) ஒரு அபேட்சகருடைய நியமனப்பத்திரமோ, வாக்காளருடைய 'வோட்டோ' தவறாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாலோ அல்லது தவறாக நிராகரிக்

கப்பட்ட தாலோ அல்லது பஞ்சாயத்துச் சட்டம் அல்லது விதிகள் பின்பற்றப் படாமல் இருந்ததாலோ, தேர்தலின் முடிவு பாதிக்கப் பட்டிருந்தாலும் சரி தேர்தல் ரத்துச்செய்யப் படலாம். தேர்தலை ரத்துச் செய்யும்போது அம்மனுவின் கட்சிக்காரரான ஒருவர் தான் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று தீர்மானம் செய்யவோ, அல்லது மறுபடியும் தேர்தல் நடத்த வேண்டுமென்று உத்தரவிடவோ, எலெக்ஷன் கமிஷனருக்கு அதிகாரமுண்டு. எலெக்ஷன் கமிஷனருடைய தீர்ப்பே முடிவானது.

பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமான சட்டமும் விதிகளும் "வக்கீல்"—1952-நவம்பர் இதழில் விவரமாக விளக்கப் பட்டிருக்கின்றன.


உ

ஸ்ரீ மகாலக்ஷ்மி துணை

திருக்காட்டுப்பள்ளியில்

பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள

**ஸ்ரீ திருச்சி கபே**

ஹோட்டலில் கை தேர்ந்த

பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்

பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும்

இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கு

டீ பார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை

செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.






இது 37 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனா
முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து
நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப்
பத்திரங்களும் பெற்றது.

**எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி
எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய
தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.**

**பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12.**
**சிறிய ,, ,, ,, அணா 6.**

**எல்லா கடைகளிலும் கிடைக்கும்.**

தயாரிப்பவர்கள்:— **ஜெயரசம் டிப்போ,**
**அய்யம்பேட்டை S. Ry.**




இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

**79. கேள்வி:** (பரமேசுவரன்—ராசிபுரம்.) ஒருவர் சுயார்ஜிதமாய்ச் சம்பாதித்த ஸ்தாவர சொத்தை அவர் மக்கள் பேரப் பிள்ளைகள் இருக்கும்போது, அவரிடம் டை. சொத்தைக் கிரயம் வாங்கினால் எல்லோரையும் சேர்த்து எழுதி வாங்கவேண்டுமா? கிரயதாரிடம் மட்டும் எழுதி வாங்கினால் போதுமா?

**பதில்:** சொத்துச் சம்பாதித்தவரிடம் மட்டில் கிரயம் எழுதி வாங்கினால் போதும். ஆனால், சொத்துச் சம்பாதித்தவர் ஒரு இந்துவாக இருந்து, அவரும் அவருடைய மக்கள் பேரப் பிள்ளைகளும் ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து, அக்குடும்பத்திற்குப் பொதுவான பூர்வீகச் சொத்துக்களும் இருந்தால் மட்டில், ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டியது. அதாவது, பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர் தனியாகச் சுய சம்பாத்தியம் செய்யும் சொத்துக்களைத் தனியாக வைத்துக் கொள்ளாமல் பொதுக் குடும்பச் சொத்துக்களுடன் கலந்து அதையும் குடும்பச் சொத்தைப் போலவே பாவித்து வந்தால், அத் தனிச் சொத்தும் பொதுக் குடும்பச் சொத்தாகிவிடும். அப்படிப் பொதுக் குடும்பச் சொத்தாகிவிட்டால் மட்டில், சொத்துச் சம்பாதித்தவர் ஏகதேசத்தில் கிரயம் செய்ய முடியாது. ஏனென்றால் அச்சொத்து அக் குடும்பத்தினர் யாவருக்கும் சொந்தமான பொதுச் சொத்தாகி விட்டபடியால். இச் சட்டம் இந்துக்களுக்கு மட்டில்தான். முஸ்லீம்களுக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ 'பிரிபடாத குடும்பம்' என்பதும், 'பொதுக் குடும்பச் சொத்து' என்பதும் கிடையாது; 'பூர்வீகச் சொத்து', 'சுய சம்பாத்தியச் சொத்து' என்ற வித்தியாசமும் அவர்களுக்

கான சட்டத்தில் இல்லை.

80. கேள்வி: (பெருமாள் உடையார்—புதுப்பட்டி.) ஒரு பிரிபடாத இந்துக் குடும்பம். அதில் அந்த இந்துவுக்கு இரண்டு மனைவிகள். மூத்த மனைவிக்குக் குழந்தை இல்லை. இளைய மனைவிக்கு ஒரே பெண் குழந்தை. இந்துவுக்குப் பூமி நிலம் மனை ஆகிய சொத்துக்கள் உண்டு. அந்த இந்துவானவர் இறந்தபின் அவருடைய சொத்துக்களை மூன்று பாகங்களாகப் பிரிப்பதா, இரண்டாய்ப் பிரிப்பதா? இரண்டு மனைவிகளுக்கும் சகோதரர்கள் உண்டு. கணவனுடைய தம்பியும் அவர் மகன்களும் உண்டு. கடைசியில் சொத்து அவர்களுக்குப் பின் யாரைச் சேரும்?

பதில்: விதவை சுவீகாரம் செய்துகொள்ளாமலிருந்தால், இறந்த இந்துவின் எல்லாச் சொத்துக்களையும் இரண்டு மனைவிகளும் சம பாகமாக முதலில் அடைவார்கள். இவ்விருவர்களில் ஒருவர் இறந்தபின் எல்லாச் சொத்துக்களையும் மற்றவர் அடைவார். சாதாரணமாக இவர்கள் அடையும் சொத்துக்களின் வரும்படிகளை மட்டில் அனுபவித்து வரலாமே ஒழிய இவர்கள் சொத்தைப் பராதீனம் செய்யமுடியாது. சில விசேஷ சந்தர்ப்பங்களில் மட்டில்தான் இவர்கள் அச் சொத்தைப் பராதீனம் செய்ய முடியும். இரண்டு மனைவிகளும் இறந்த பிறகு, இளைய மனைவியின் பெண்தான் எல்லாச் சொத்துக்களுக்கும் வார்சு. அவளும் ஸ்திரீ வார்சாகையால், தம் ஆயுள் வரைதான் அச் சொத்துக்களை அனுபவிக்க முடியும். அவள் இறந்துவிட்டால், அவளுக்கு அப்பொழுது ஆண் மக்கள் இருந்தால் அவர்கள்தான் வார்சு ஆவார்கள். பெண்ணுக்கு ஆண் மக்கள் இல்லாவிட்டால், ஆதியில் இறந்த இந்துவின் தம்பிதான் வார்சு. மனைவிகளின் சகோதரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

81. கேள்வி: (ராமலிங்கம் செட்டியார்) ஒரு இந்துக் குடும்பத்திலுள்ளவர் கல்யாணம் செய்து கொள்ளச் செயல் அற்றவர். மாமனாரின் செலவில் கல்யாணம் செய்துகொண்டு, மாமனார் வீட்டிலேயே இருந்து வந்தார். ஓர் மகன் பிறந்ததும், மனைவியையும் மகனையும் மாமனார் வசம் விட்டுவிட்டு அவர் அயல் நாடு சென்றார். அங்கே பணம் சம்பாதித்து மாமனாருக்கு அனுப்பினார். மாமனார் வீடுகட்டி நஞ்சை வாங்கி வைத்தார். பிறகு சில வருடம் சென்று அவர் ஊருக்கு வந்தார். மனைவி இறந்துவிட்டாள். அவர் இரண்டாவது தாரம் செய்துகொண்டு, அவள் மூலம் மூன்று ஆண் குழந்தைகள் உண்டு. முதல் மனைவியின் மகனுக்குக் கலியாணமும் ஆன பிறகு, அவர் இளைய மனைவியின் போதனையின் பேரில் மூத்த மனைவியின் தாய் தகப்பன் இருவரையும் வீட்டை விட்டு விரட்டி, மூத்த தாரத்தின் மகனுக்குப் பாகம் கிடையாதென்றும் சொல்லி மூத்த தாரத்தின் மகனையும் மருமகளையும் வெளியேற்றிவிட்டார். மேலே கண்ட சொத்தில் அவருடைய மூத்த மனைவியின் மகனுக்குப் பாகம் கிடைக்குமா? எவ்வளவு பாகம் உண்டு.

பதில்: அவர் செய்தது நியாயமோ, நியாயமல்லவோ அப்படிச் செய்ய அவருக்குச் சட்டம் இடம் கொடுக்கிறது. ஏனென்றால், அவர் சுயமாகச் சம்பாதித்த சொத்துக்களை அவர் உள்ளவரை அவர் இஷ்டம்போல் அனுபவிக்கலாம். அச் சொத்துக்களை யாருக்கு வேண்டுமானாலும் அவர் கொடுத்து விடலாம். அவர் உயிர் உள்ளவரை அவருடைய மூத்த தாரத்தின் மகனுக்கோ, வேறு எவருக்கோ, அவருடைய சொத்துக்களில் எவ்வித பாகமோ உரிமையோ கிடையாது.

82. கேள்வி: (பெரிய கறுப்பன்—நிவித்திகலை—சிலோன்.) இருவருக்குச் சொந்தமான நன்செய் புன்செய் வரப்பில், புன்செய்க்குச் சொந்தக்காரர் வேப்ப மரம், புளியமரம் மற்றும் நிழல் தரக்கூடிய மரங்களை உற்பத்தி செய்து வந்ததை நன்செய்க்குச் சொந்தக்காரர் தடுத்தும், அதைப் புஞ்சைக்காரர் பொருட்படுத்தாம லிருந்தால், அவர் உற்பத்தி செய்த மரங்களை, பலாத்காரமின்றி, சட்ட பூர்வமாக வெட்டுவதற்கு என்ன செய்யலாம்?

பதில்: வரப்பு யாருக்குச் சொந்தமானதென்று கேள்வியில் இல்லை. புன்செய்க்காரருடைய புன்செய் அளவுக்குள் வரப்பும் சேர்ந்ததாக இருந்தால், அவருக்குச் சொந்தமான வரப்பு நிலத்தில் அவருக்கு இஷ்டமான மரங்களைப் பயிர் செய்யச் சட்டப்படி அவருக்கு உரிமை உண்டு. ஆனால் ஒருவர் நிலத்திலிருக்கும் மரத்தின் கிளைகள் அடுத்த நிலத்தின் மேலே நீட்டிக் கொண்டிருந்தால்

அது அந்த அடுத்த நிலத்தின் சொந்தக்காரருக்கு ஒரு 'உபத்திரவம்' அல்லது 'தொல்லை' (Nuisance) விளைவிப்பதாகவே சட்டத்தால் கருதப்படும். அடுத்த பூமியின் சொந்தக்காரர் அந்த உபத்திரவத்தை நீக்கும்படி மரத்தின் சொந்தக்காரருக்கு 'நோட்டீஸ்' கொடுத்தும் அவர் அலட்சியமாக இருந்தால், அடுத்த நிலக்காரர் தம் நிலங்களின் மீது பரவியுள்ள கிளைகளைத் தாமே வெட்டி விடலாம். நோட்டீஸ் கொடுக்காமல்கூட வெட்டப் பாத்தியமுண்டென்றும் சில ஆங்கில நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். தாமே வெட்டாவிட்டாலும் கோர்ட்டில் தாவா செய்தும் அக்கிளைகளை வெட்டும்படி செய்யலாம். பரவும் கிளைகளைப் போலவேதான் அடுத்த நிலத்திற்குப் பரவும் வேர்களும். இதுவும் ஒரு உபத்திரவம் அல்லது தொல்லை (Nuisance) தான். அடுத்த நன்செய் நிலக்காரர் தமக்குத் தொல்லை கொடுக்கும் வேர்களை முன் சொன்னபடியே அகற்றலாம். ஒருவர் நிலத்திலுள்ள மரங்கள் அடுத்த நிலக்காரர் நிலத்தின்மீது எவ்வளவு வருடங்கள் நீட்டிக் கொண்டிருந்தாலும் படர்ந்தாலும் அதனுல் இம்மரக்கிளைகள் அப்படியே நீட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்ருவது அதை அடுத்த நிலக்காரர் சகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று வற்புறுத்தவாவது மரத்தின் சொந்தக்காரருக்கு எவ்விதப் பாத்தியமும் சித்தித்து விடாது. பரவும் கிளைகளின் கீழ் உள்ள பிறர் நிலத்திலும் மரத்தின் சொந்தக்காரருக்கு எவ்வித அனுபோக பாத்தியமும் ஒருநாளும் ஏற்படாது. வேர்களுக்கும் அதே சட்டம்தான். அடுத்த நிலக்காரர் எப்பொழுது வேண்டுமாளுலும் இந்த உபத்திரவம் அல்லது தொல்லையை மேற்கண்ட விதம் அகற்றிக்கொள்ள உரிமை உண்டு. இதற்குக் காலாவதி ஒன்றுமில்லை.

இது ஒருவர் நிலத்தில் மட்டும் வளர்ந்து பிறர் நிலத்தின் மேலோ, கீழோ பரவும் மரத்தைப் பற்றியதே. அப்படியில்லாமல் ஒரு மரம் இருவர்களுடைய நிலங்களுக்குநடுவே, பொழியிலோ, வேலியிலோ, வரப்பிலோ, வளர்ந்து அதன் அடிப்பாகம் இருவர் நிலங்களிலும் இருந்து அதன் வேர்கள் இருவர்களுடைய நிலங்களிலிருந்தும் ஊட்டம் பெற்ருல் அதற்குச் சட்டம் வேறு. அம்மரம் அதன் கிளைகள், காய், பழம் எல்லாம் இருவருக்கும் சம பாத்தியமும் உரிமையும் உள்ள ஒரு பொதுச் சொத்தாகும்—("வக்கீல்"—1951 செப்டம்பர் இதழில் 'வழக்கும்—தீர்ப்பும்' என்ற பகுதியில் 'பொல்லாத மரங்கள்'—என்ற வழக்கைப் படிக்கவும்.)

83. கேள்வி: (சுப்பிரமணியன்.) ஒரு பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர் சில காலமாகத் தம் போக்காக மெம்பர்களைக் கையில் போட்டுக்கொண்டு தம் இஷ்டப்படி செலவு செய்து வந்து கொண்டிருந்தார். இவ்வருடம் எலெக்ஷனில் அவருக்கே தலைவர் பதவி கிடைத்தது. அப்பஞ்சாயத்தைச் சேர்ந்த இரண்டு மைலுக்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்தில் 400 வோட்டர்கள் இருக்கிருர்கள். இவர்கள் இரண்டு மெம்பர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். அந்த ஊருக்கு இதுவரை ஒருவித நன்மையும் செய்யவில்லை. அந்த ஊரிலிருந்து வருடம் சுமார் ரூ. 1000 வரை வரி வசூலாகிறது. இவ்வருடம் பட்ஜெட்டிலும் அந்த ஊரை ஒதுக்கிவிட்டு, இரண்டு மெம்பர்கள் சொல்லுவதைக் கவனியாமல் தங்கள் ஊருக்கே செலவு செய்யப் பட்ஜெட் தயார் செய்து விட்டார்கள். ஒதுக்கப்பட்ட ஊர் வோட்டர்களும் மெம்பர்களும் அந்தப் பஞ்சாயத்திலிருந்து விலகிக் கொள்ள ஏதாவது வழி இருக்கிறதா? அல்லது அவ்வூருக்கும் அதிகாரிகள் மூலம் நன்மை செய்து கொள்ளவோ வேறு பஞ்சாயத்துடன் சேர்ந்து கொள்ளவோ வழி இருக்கிறதா?

**பதில்:** எந்தச் சபையிலும், அது பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, சட்டசபையாக இருந்தாலும் சரி, பார்லிமெண்டாக இருந்தாலும் சரி, பெரும்பான்மையான அங்கத்தினர்களைக் 'கையில் போட்டுக்கொண்டி'ருப்பவருக்குத்தான் ஜனநாயக பரிபாஷையில், 'தலைவர்' என்று பெயர். இப்போது பெரும்பான்மைப் பஞ்சாயத்து மெம்பர்களால் அலட்சியம் செய்யப்படும் கிராமமானது ஒரு தனி ரிவின்யூ கிராமமாக இருந்து, அதன் ஜனத்தொகை (வோட்டர் தொகை அல்ல) 500க்குக் குறையாமலிருந்தால், அக்கிராம வாசிகள் இன்ஸ்பெக்டருக்கு மனுப்போட்டு, பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 3 (1) இன்படி தங்களுக்கு ஒரு தனிப் பஞ்சாயத்து அமைத்துக்

கொள்ளலாம்; ஜனத்தொகை 500க்குக் குறைவாக இருந்தால் அடுத்தாற் போல் இருக்கும் வேறு பஞ்சாயத்துடனும் சேர்த்து கொள்ளலாம். ஆனால் கவனிக்கப் படாத இவ்வூரானது ஒரு தனி ரிவின்யூ கிராமமாக இல்லாவிட்டால், மேற்கண்டபடி செய்து கொள்ளப் பஞ்சாயத்துச் சட்டம் இடம் கொடுக்கவில்லை.

அப்படிச் செய்ய முடியாவிட்டால், ஒரு பஞ்சாயத்தானது எல்லா இடங்களிலும் கட்டாயமாகச் செய்யவேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. உதாரணமாக ரோடு ரிபேர், விளக்குப் போடுவது, தெருக் கூட்டுவது போன்ற பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 50இல் கண்ட கடமைகள். பிரஸ்தாப கிராமத்தில் இக் கடமைகளை வேண்டுமென்று செய்யத் தவறிய பஞ்சாயத்தைக் கலைக்க வேண்டுமென்று, பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 48இன்படி அக் கிராமத்தினர் சர்க்காருக்கு மனுப் போடலாம். மேலும், பஞ்சாயத்தானது செய்யத் தவறிய கடமைகளை செக்ஷன் 46இன்படி இன்ஸ்பெக்டரே செய்து பஞ்சாயத்திலிருந்து பணம் கொடுக்கும்படி உத்தரவிடலாம்.

84. **கேள்வி:** (லக்ஷ்மிநாராயணன் — தஞ்சாவூர்.) ஒரு மாதப் பத்திரிகை அல்லது வாரப் பத்திரிகை (journal) ஆரம்பிக்க விரும்பும் ஒருவர், தம்மை ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் சர்க்காரிடம் பதிவு செய்து கொள்ளவேண்டியது அவசியமா? அரசியல், மதம், கக்ஷி, ஒன்றுமில்லாமல் மொழி வளர்ச்சியை மாத்திரம் விரும்பும் இதழ்களுக்கும் ஷை விதி பொருந்துமா?

**பதில்:** பொதுச் சமாசாரங்களோ, பொதுச் சமாசாரங்களைப்பற்றிய குறிப்புக்களோ அல்லது அபிப்பிராயங்களோ இருக்கும் பத்திரிகைகளைப் பிரசுரம் செய்யவேண்டுமானால், பிரசுரிப்பவரும் (publisher) அச்சகத்தாரும் (printer) இருவரும் 1867ஆம் வருடத்திய அச்சகப் புத்தகப் பதிவுச் சட்டத்தின் (The Press and Registration of Books Act—1867) செக்ஷன் 5இன் படி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜராகி, ஒரு உறுதிமொழி (Declaration) செய்ய வேண்டும். பிறகுதான் பத்திரிகையைப் பிரசுரம் செய்யலாம். ஆசிரியர் (Editor) மேற்கண்டபடி 'டிக்ளரேஷன்' செய்ய வேண்டியதில்லை. ஆனால் அப்பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும், ஆசிரியர் யார் என்பதும், பிரசுரிப்பவர், அச்சியற்றுவிப்பவர் இவர்கள் பெயரும் கட்டாயமாக அச்சடிக்கப்படவேண்டும். மொழி வளர்ச்சிக்கான சமாசாரங்களையோ அவற்றைப் பற்றிய அபிப்பிராயங்களையோ வெளியிடும் பத்திரிகைகளுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

85. **கேள்வி:** (L. 62) ஒரு பிராமிசரி நோட்டில் போடப்பட்டிருக்கும் சாட்சிகள் இரண்டு பேரும் கடன் கொடுத்தவருக்கு நஷ்டம் உண்டுபண்ணவேண்டும் என்ற எண்ணத்துடன் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தவர் அதில் கண்ட தொகை வாங்கியதை நாங்கள் பார்க்கவில்லை என்று கோர்ட்டில் சாட்சி சொன்னால், டிக்ரி ஆகுமா அல்லது தாவா தள்ளுபடி ஆகுமா?

**பதில்:** பிராமிசரி நோட்டுக்களுக்குப் பிரதிப் பிரயோஜனம் இருப்பதாகவேதான் முதலெடுப்பில் பாவிக்கப்படும். (செக்ஷன் 118-நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்ட் ஆக்ட்) பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தவர் தான், யாதொரு பிரதிப் பிரயோசனமுமில்லாமல் தாம் நோட்டு எழுதிக் கொடுத்ததாக ருசுப்பிக்க வேண்டும். மேலும், பிராமிசரி நோட்டில் சாட்சி போட்டிருப்பவர்களின் சாட்சியத்தை நம்பவேண்டுமென்றோ, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றோ சட்டம் இல்லை. அவர்கள் இருவரும் வேண்டுமென்று பொய் சாட்சி சொன்னாலும், கடன் கொடுத்தவர் வேறு விதத்தில் தாம் பணம் கொடுத்ததை ருசுப்பிக்கலாம். டிக்ரி ஆவதும் தாவா தள்ளுபடி ஆவதும் யாருடைய கட்சியானது நீதிபதியால் நம்பப்படுகிறது என்பதைப் பொறுத்தது.

86. **கேள்வி:** (ராமச்சந்திரன் — சேலம்) சாதாரண மனிதர் ஒருவர் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யும் குற்றத்திற்குத் தபால் மூலம் கேள்வி கேட்டால், பதில் கொடுக்காமல் இருக்கச் சட்டம் இருக்கிறதா? அதன் காரணமாக, நஷ்டங்கள் ஏற்பட்டால், சர்க்கார் பேரில் நஷ்ட ஈட்டுக்கு வாதாடுவதற்குச் சட்டம் இருக்கிறதா?

**பதில்:** கேள்வி தெளிவாக இல்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர் குற்றம் செய்

தால், அவருக்குச் சட்டத்தில் எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. சாதாரண மனிதர் ஒருவர் குற்றம் செய்தால் எப்படியோ அப்படித்தான் சர்க்கார் உத்தியோகஸ்தர் செய்யும் குற்றத்தைப் பற்றியும். அவர்மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் சில காரியங்களை எந்த எந்தச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யலாமென்று அந்தந்தச் சட்டத்தில் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சட்டத்தை அனுசரித்து ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் செய்யும் செய்கைகள் குற்றமாகமாட்டா. உதாரணமாக, ஒருவரை மற்றொருவர் பலவந்தமாகப் பிடித்து இழுத்துப் போவது ஒரு குற்றமாகும். ஆனால் ஏதோ குற்றம் செய்ததாகச் சந்தேகப்பட்ட ஒருவரைப் போலீஸ் உத்தியோகஸ்தர் பலவந்தமாக அழைத்துப் போக, அதாவது அரெஸ்டு செய்ய, அவருக்குச் சட்டப்படி உரிமை உண்டு. அவர் செய்வது குற்றமாகாது. மேலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இன்னும் ஒரு பாதுகாப்பும் இருக்கிறது. அதாவது, சட்டப்படி தாம் ஒரு காரியத்தைச் செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதாக, அவர் உண்மையில் நினைத்துக்கொண்டு நல்லெண்ணத்துடன் செய்யும் காரியங்களும் குற்றமாகமாட்டா. கடைசியில் அச்சந்தர்ப்பங்கள் இல்லை என்று ஏற்பட்டாலும் சர்க்கார் உத்தியோகஸ்தர் செய்வது குற்றமாகாது. (குற்றங்களைப் பற்றிய இந்தியன் பீனல்கோடு என்ற சட்டத்தின் செக்ஷன் 79) பற்பல சட்டங்களில் அந்தந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் சர்க்கார் அதிகாரிகளுக்குச் சில விசேஷ பாதுகாப்புக்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியும், சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர்மீது ஏதாவது சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமானால், சர்க்கார் அல்லது வேறு அதிகாரியின் முன் அனுமதி வாங்கிக் கொண்டும், எத்தனை கால அளவுக்குள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் என்று அந்தந்தச் சட்டத்தில் நிபந்தனைகள் இருக்கும். இவைகளை எல்லாம் கவனித்து, சர்க்கார் உத்தியோகஸ்தர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமே ஒழிய, வெறும் கடிதம் ஒன்றுபோட்டு விட்டு அதற்குப் பதில் கிடைக்கவில்லை என்று புகார் செய்வதில் அர்த்தமுமில்லை; பிரயோஜனமுமில்லை. சர்க்கார்மீது நஷ்டஈடு கேட்கலாமா கூடாதா என்பது அந்தந்தச் சந்தர்ப்பங்களைப் பொறுத்தது.

87. கேள்வி: (சிவப்பிரகாசம்) 1951-டிசம்பர்-1ஆம் தேதியன்று சாகுபடி சுவாதீனமுடைய ஒரு சாகுபடிதாரை நிலச் சொந்தக்காரர் நீக்கி இருந்து, சாகுபடிதார் தஞ்சைச் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி சமரச அதிகாரிக்கு மனுச் செய்து கொண்டதின் பேரில், சமரச அதிகாரி உத்தரவின் படி மீண்டும் பழைய சாகுபடிதாரிடம் நிலம் ஒப்புவிக்கப்பட்டிருந்து, ஷை சாகுபடிதார் நிலச் சொந்தக்காரருக்கு நெல் அளக்காவிட்டால், சாகுபடிக்காரரிடம் வசூல் செய்ய ஆஸ்தியும் இல்லாவிட்டால், நெல்லுக்குச் சர்க்காரும் ஜவாப்தாரி ஆவார்களா?

பதில்: சாகுபடிதார் தஞ்சைச் சட்டப்படி நிலச் சொந்தக்காரருக்கு அளக்க வேண்டிய நெல்லை அளக்கத் தவறினால், அச்சாகுபடிதாரை நிலத்தை விட்டு அகற்ற வேண்டு மென்று தஞ்சைச் சட்டத்தின் செக்ஷன் 10-இன் படி மனுப்போட நிலச் சுவான்தாருக்கு உரிமை உண்டு. சட்டங்களினால் ஒருவருக்கு எவ்வித நஷ்டம் ஏற்பட்ட போதிலும் அதற்குச் சர்க்கார் ஜவாப்தாரி ஆக மாட்டார்கள்.

88. கேள்வி: (பெரியசாமிமுத்து ராஜா—வைத்தலைகூடலூர்) ஒருவருக்குச்சொந்தமான தோப்பு பல விருக்ஷங்கள் உள்ள சுமார் 10 ஏகர் நிலத்தில், சுமார் 40 செண்டு நிலங்களில் இருபது நபர்கள் குடியிருந்து வருகிறார்கள். குடியிருப்புக்கு யாதொரு ரிகார்டுகளும் இல்லாமல் நில வாடகை மட்டும் வருடம் ஒன்றுக்கு ரூ. 6 வீதம் சுமார் 20 வருட காலமாகக் கொடுத்து வருகிறார்கள். குடியிருப்பவர்களை நிலப்பட்டாதார் வீடுகளைக் காலி செய்து விட வேண்டு மென்றும் அங்கே தாம் பயிர் செய்ய வேண்டு மென்றும் கேட்டால், வீடுகளைக் காலி செய்வதற்குச் சட்டம் இருக்கிறதா; குடியிருப்பவர்களுக்கு இதைத் தவிர வேறு இடம் கிடையாது.

பதில்: ஜாகை - வாடகைக் கட்டுப்பாடு சட்டம் அமுலில் இல்லாத இடங்களில் - குடியிருந்து வரும் பாத்தியத்தைச் சட்டப்படிக்கான நோட்டீசு மூலம் முடிவு

187722

செய்து விட்டு, நிலம் தமக்குச் சுவாதீனமாக வேண்டுமென்று கேட்டு நிலப்பட்டாதார் தாவா செய்து, நிலத்தைத் தம் வசம் செய்து கொள்ளச் சட்டம் இடங் கொடுக்குமா? குடியிருப்பவர்கள் எவ்வளவு [illegible] வேறு ஒருவருடைய நிலத்தில் குடியிருந்து வந்தாலும், நிலம் அவர்களுக்குச் சொந்த மாகி விடாது. குடியிருப்பவர்களுக்கு வேறு இடம் இருந்தாலும் இல்லா விட்டாலும் அதே சட்டம் தான்.

89. **கேள்வி:** (ஜம்புலிங்கம் — கூடலூர்.) ஒருவர் ஒரு சுவாமி பேரில் இருக்கும் பட்டா நிலத்தைச் சுமார் 25 வருடகாலமாக அனுப வித்து வருகிறார். தீர்வையும் அவரே சுவாமி பட்டாவுக்கு என்று செலுத்தி வருகிறார். அதிலுள்ள மகசூலையும் அவரே எடுத்துக் கொள்ளுகிறார். அந்நிலத்தை ஊரிலுள்ள சில பேர்கள், நிலம் உமக்குச் சொந்தமில்லை. சுவாமிக்குத்தான் என்று மறித்தால், நிலம் யாருக்குப் போகும்?

**பதில்:** நிலம் சுவாமிக்குத் தான் சொந்த மாக இருக்கும். ஆனால் ஊரிலுள்ளவர்கள் எல்லாம் அனுபோகதாரை மறிக்கமுடியாது. கோயிலின் டிரஸ்டிகளோ அல்லது கோயி லுக்காக அக்கரையுள்ள வேறு நபர்களோ, சட்டப்படி கோர்ட்டில் தாவா செய்து தான் நிலத்தைக் கோயிலுக்காகத் திருப்பிச் சுவா தீனம் செய்விக்க முடியும்.

90. **கேள்வி:** (ஷை) ஒருவர் சில பேர் களிடத்தில் புரோநோட்டு மூல்யமாகச் சில கடன்களை வாங்கி விடுகிறார். கடன் வாங்கிய வருக்கு நிலம் கொஞ்சமாக இருக்கிறது. சிலருடைய கடன் தொகைகளுக்கு மட்டில், பூரா நிலத்தையும் அவர் அடமானம் போக்கி யம் என்று எழுதி கொடுத்தால், இன்னும் பாக்கியுள்ள கடன் கொடுத்தவர்கள் அச் சொத்தைத் தொடர இடமுண்டா? தொடரு வதற்கு வழி எப்படி? தொடர்ந்தால் எல்லோருக்கும் எப்படி யாகும்?

**பதில்:** எல்லாக் கடன்களையும் பூரா வாகக் கொடுக்கச் சக்தியற்றவர், தமக்குக் கடன் கொடுத்தவர்களில் சிலருக்கு மட்டில் சலுகை காண்பித்து, அவர்களுடைய கடன் களுக்கு மட்டில் வகை செய்யும் விதம் அவர்களுக்குத் தம் சொத்தைப் பொறுத்துக் கிரயம் அடமானம் போக்கியம் முதலிய பரா தீனப் பத்திரங்கள் எழுதிக் கொடுத்தால், அவ்விதப் பத்திரம் ஒவ்வொன்றும் ஏற்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மற்றக் கடன் கொடுத்தவர் எவரும், கடன் கொடுக்க வேண்டியவரை 'இன்சால் வெண்டு' என்று, அதாவது கடன் கொடுக் கச் சக்தியற்றவரென்று தீர்மானம் செய்ய கோர்ட்டில் மனுக் கொடுக்கலாம். சிற்சில விதி விலக்குகளுக் குட்பட்டு அம்மனுவுக்கு முன் 3 மாதங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் அடமானம், போக்கியம் முதலிய பராதீனங் கள் எல்லாம் கோர்ட்டால் ரத்துச் செய்யப் பட்டு, எல்லாச் சொத்துக்களும் எல்லாக் கடன்காரர்களுக்கும் விதாசாரமாகப் பிரித் துக் கொடுக்கப்படும். அதற்காக இருக்கும் சட்டம் தான் 'இன்சால்வென்சிச் சட்டம்' எனப்படும்.

91. **கேள்வி:** (சக்ரபாணி — சிதம்பரம்) ஏலச் சீட்டுப் பிடித்து வந்தவர், ஏலச் சீட்டுப் போட்டுத் தொகை கொடுத்து இன்னும் ஏலம் எடுக்காதவர்களுக்கு அவர் கள் செலுத்தி வந்த தொகையைக் கொடுக் காமல் ஊரை விட்டுப் போய் விட்டால், பணத்தை வாங்க வழி என்ன?

**பதில்:** ஏலச்சீட்டுப் பிடித்தவர் மீது சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் ஊரை விட்டுப் போய் விட்டால், அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வும் இடம் உண்டு.

---

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5- தேதிக்குள் உங்களிம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும் சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கிவரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 4ம்- தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக்கொள்ளலாம்.

வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தத் தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர்செய்து அனுப்பலாம்.

---

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, OR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B. A. B. L.

# தமிழில்
## சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

**"வக்கீல்" 1952-ம் வருடம்** ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணை யுடன் பைண்டு செய்யப் பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

**"வக்கீல்" 1951-ம் வருடம்** பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

**விற்பனை வரி** (விதிகள் உள்பட விளக்கம்) ரூ. 2 0 0

**சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்** [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

**தஞ்சை சாகுபடிதார் பண்ணை யாள் பாதுகாப்புச் சட்டம்** [புதிய சட்டம், விதிகள், நமூனுக்கள், குத்தகைப் பத்திர நமூனு, வார சாகு படிப் பத்திர நமூனு உள்பட விளக்கம்] 0 6 0

**தபால் சார்ஜ் பிரத்தியேகம்**

**வி. பி. பி. கிடையாது.**
**அணு 8 சேர்த்து அனுப்பினுல்**
**ரிஜிஸ்டர் தபால் மூலம்**
**அனுப்பப்படும்.**

*கீழே கண்ட விலாசத்திற்கு தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—*

**மானேஜர்,**
"வக்கீல்" காரியாலயம்,
**தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S. I.)**



REGD. NO. M. 5399. THE "VAKIL" MAY 1959


ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

REGISTERED TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்
வாசனைப்பாக்கு, பலகாய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris.
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.


PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TDR.